விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 19 புதன்கிழமை (03.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074


### எழுமாற்று பரிசோதனை
## கொடிகாமம் சந்தையில் வியாபாரிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தையில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வியாபாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழில் நேற்று 19

## யாழின் முத்தீவுகள் சீனாவுக்கே
## அமைச்சரவை முடிவை மாற்ற முடியாது
### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல



(கொழும்பு)

அரசியல் மற்றும் சர்வதேச இராஜதந்திர நெருக்கடிகளுக்காக அமைச்சரவை தீர்மானங்கள் மாற்றப்பட மாட்டாது.

யாழ். முத்தீவுகளில் சீன மின் உற்பத்தி வேலைத் திட்டம் தொடர்பான தீர்மானத்தில் எந்த மாற்றமும் இதுவரையில் கிடையாது என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். 19

## யாழ்.பல்கலை மாணவனுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் பொறியியல் பீடத்தில் கல்வி பயிலும் நுவரெலியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு கொரோ 19

### கொரோனாவால் இறப்பவர்களின் சடலங்களை
# இரணைதீவில் புதைக்க அரசாங்கம் தீர்மானம்
### புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கவனயீர்ப்பு போராட்டம்

*(கொழும்பு)* கொரோனா தொற்றால் மரணித்தவர்களின் உடல்களை கிளிநொச்சி இரணைதீவு பகுதியில் அடக்கம் செய்வது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் குறித்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரணைதீவு பகுதி மக்கள் இன்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

முஸ்லிம் சகோதரர்களால் பல்வேறுபட்ட பகுதிகள் முன்மொழியப்பட்ட போதிலும் அவற்றை தவிர்த்து யுத்தத்தால் இடம்பெயர்ந்து பல இன்னல்கள் மத்தியில் 2017ஆம் ஆண்டு பல கட்ட போராட்டங்களின் பின்னர் குடியேறிய எமது இரணைதீவு பகுதிகளில் உடல்களை அடக்கம் செய்ய மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் கவலை அழிப்பதாக இரணைதீவு பங்குத்தந்தை மடுத்தீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைதீவு பகுதியானது நீரேந்து பிரதேசமாக காணப்படுவதனால் கொரோனா தொற்றுள்ள உடல்களை புதைப்பதனால் நீரூடாக தொற்று பரவ வாய்புள்ளதாகவும் அண்மைக் காலமாகவே இரணைதீவு மக்கள் குடியேறி படிப்படியாக இயல்பு நிலைக்கு 19

## வடக்கில் 9 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 19

### இலங்கை அரசின் கோரிக்கையை
## ஐ.நா பேரவை நிராகரிப்பு
### ராஜபக்ஷ அரசாங்கம் கடும் ஆட்சேபனை

(கொழும்பு)

கடந்த வாரம் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட மோசமான அறிக்கை குறித்த அரசாங்கத்தின் பதிலை 19

## வவுனியாவில் விபத்து வயோதிபர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் நேற்றுக் காலை வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 19

## கொரோனா தொற்று மேலும் 7 பேர் பலி
### உயிரிழப்பு 483 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 7 பேர் உயிரி 19

## மாகாண சபைத் தேர்தலுக்கு சிங்கள அமைப்புகள் எதிர்ப்பு
### 13ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும்

(கொழும்பு)

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தேசிய அமைப்புகள் உறுதியாக இருக் 19

### கிளிநொச்சி இரணைதீவில்
## மக்கள் எதிர்ப்பை மீறி தோண்டப்பட்ட குழிகள்

(கிளிநொச்சி)

மக்களின் கடும் எதிர்ப்பை மீறியும் இரணைதீவு பகுதியில் கொரோனா தொற 19

## சடலத்தை அடக்கம் செய்ய இரணைதீவு பொருத்தமற்றது
### அமைச்சர் டக்ளஸ் எதிர்ப்பு

(கொழும்பு)

கோவிட் - 19 தாக்கத்தின் காரணமாக இஸ்லாமியச் சகோதரர்கள் உயிரிழப்பார்களாயின், அவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இரணைதீவு பொருத்தமான இடமில்லை என்று கடற 19


### தமிழ் – முஸ்லிம் உறவைப் பிரிக்க
## அரசு சதி
### கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திரு. சின்னத்துரை சண்முகராஜா (ஷண்)

(மூத்த ஊடகவியலாளர்)

யாழ்ப்பாணம், இரண்டாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிட மாகவும் கொழும்பு நாரஹேன் பிட்டி அண்டர்சன் தொடர்மாடிக் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னத்துரை சண்முகராஜா நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத் தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னத்துரை - தங்கமுத்து தம்பதியரின அன்பு மகனும் காலஞ் சென்ற ராஜரட்ணம் - விசாலாட்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியவதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற பத்மாவதி மற்றும் தர்மராஜா காலஞ்சென்ற ஜீவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மோகனாம்பாள் காலஞ்சென்ற அக்னஸ், காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ரட்ணதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் Dr.சாந்தினி (U.K), சுதர்சன் (பொறியியலாளர் - U.S.A.), கனகேஸ்வரன் (பொறியியலாளர் - U.K.) ஆகியோரின் சிறிய தந்தையும் செந்தில் குமரன் (ஆசிரியர்), நந்தகுமரன் (பொறியியலாளர் - S.L.T.), உமையாள் (காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்), மாரிசுகத். ரஜனி அமில, பிரதீப் (ரஞ்சன்), காஞ்சனா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2021) புதன் கிழமை காலை 8.00 மணியளவில் இல.125, அரசடி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-1575)

இல. 125, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி பொன்னையா அழகம்மா

கோப்பாய், அப்பிளானையைப் பிறப்பிடமாகவும் இல. 206/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா அழகம்மா நேற்று (02.03.2021) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் பொன்னையாவின் அன்பு மனைவியும் றேனுகா (பிரான்ஸ்), விஜித்தா (அமெரிக்கா), வாகீசன் (ஆசிரியர் - கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நேமிநாதன் (பிரான்ஸ்), பிரதீபன் (அமெரிக்கா), பிரியதர்சினி (ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுயம்பவன், மானதி, பிரவர்ணா, பிரவிஷ்னா, பிரகலாதன், துகிலன், மேகவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தம்பிராசா, ஞானரத்தினம், செல்லத்துரை, குணரத்தினம், ராசதுரை, செல்லம்மா (கோப்பாய்), தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லத்துரை (உசன்), இராமலிங்கம் (யாழ்ப்பாணம்), சின்னத்துரை (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2021) புதன்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் இல. 206/4, பிறவுண் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1577)

இல. 206/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


021 221 9911
077 378 7294

தகவல்:-
குடும்பத்தினர்
பொ. வாகீசன் (மகன்)

# துயர் பகிர்கின்றோம்

கிளிநொச்சியில் இயங்கும்
எமது விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் இயக்குனரும்
யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான
மருத்துவர் த. சத்தியமூர்த்தி
அவர்களின் பாசமிகு தந்தை

## அமரர் பி. தங்கமுத்து



அவர்களின் மறைவுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்து அவரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-1573)

பிறப்பு - 27.09.1934
இறப்பு - 01.03.2021

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகத்தினர்
விஞ்ஞானக் கல்வி நிலையம், கிளிநொச்சி.

# கொரோனாவினால் மரணிப்போரின் சடலங்களை இரணைதீவில் புதைக்க முடிவு



(கொழும்பு)

**கொவிட்-19 தொற்றினால் உயிரிழப்பவர்களின் சரீரங்களை கிளிநொச்சி - இரணைதீவில் அடக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்தார்.

சுகாதார வழிகாட்டுதல்களைப பின்பற்றி இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு, இந்த இடத்தை அடையாளம் கண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் கொவிட் நோயால் மரணிப்போரின் சரீரங்களை அடக்கம் செய்வதற்கு அண்மையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மனித உரிமை பேரவையின் பிரேரணை; இந்தியா சரியான தீர்மானத்தை மேற்கொள்ளும்

(கொழும்பு)

மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான பிரேரணை குறித்து இந்தியா சரியான தீர்மானத்தை மேற்கொள்ளும் என இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, இலங்கை தமிழர்கள் தொடர்பில் இந்திய அரசாங்கம் 13 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்திற்கு உட்பட்ட அதிகாரப் பகிர்வை இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ள நிலையில், தற்போது நடைபெறும் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் தொடர்பில் தற்போது இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறாக இருக்கும் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர், "13ஆவது அரசியல் யாப்பு திருத்தம் 1976 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன காலததில் இடம்பெற்றதாகும்.

அந்த நிலைப்பாட்டில் இந்தியா தொடர்ந்து இருந்து வருகின்றது.

2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அமைச்சர் எமது படையினர் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தார். துரதிஷ்டமான இந்த கருத்துக்களினால் பல நாடுகள் மத்தியில் இலங்கை தொடர்பில் அதிருப்தி ஏற்பட்டது. உண்மை நிலையை புரிந்துகொண்டு பல நாடுகள் செயற்பட்டதற்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறவே சடலங்களை அடக்கம் செய்ய அரசாங்கம் அனுமதித்தது

(வவுனியா)

முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறும் நோக்கிலேயே கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "முஸ்லிம் மக்களது இறந்த உடல்களை புதைப்பதா? அல்லது எரிப்பதா? என்கின்ற நீண்ட நாள் விவாதங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றன.

உலகத்தில் 190இற்கு மேற்பட்ட நாடுகளில் கொரோனாவால் இறந்த மக்களின் உடலை புதைக்கும் நிலையில், இலங்கையில் கூட இது தொடர்பாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு எரிக்கலாம் அல்லது புதைக்கலாம் என அறிக்கை கொடுத்தும் இலங்கை அரசு புதைக்கவிடாமல் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் புதைப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள் என்றால் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்று வரவுள்ள நிலையில், முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறும் நோக்கிலேயே அடக்கம் செய்ய அனுமதி வழங்கியிருக்கிறது.

ஏனைய போராட்டங்களுக்கோ, ஆர்ப்பாட்டங்களுக்கோ அல்லது பாகிஸ்தான் பிரதமர் இங்கு வந்து சென்றதற்காகவோ அல்ல.

வர்த்தமானி அறிவித்தலைக்கூட இரத்துச் செய்யக் கூடிய ஒரு நாடாகத்தான் இலங்கை இருக்கிறது. ஏனெனில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் வெளியிடப்பட்ட வர்த்தமானிகூட 4 மணித்தியாலங்களில் ஜனாதிபதியின் உத்தரவில் இரத்துச் செய்யப்பட்ட வரலாறும் இருக்கின்றது.

அதேபோல்சுகாதார அமைச்சரால் வெளியிடப் பட்டுள்ள வர்த்தமானியும் தேவையேற்பட்டால் இரத்துச் செய்யப்படலாம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-250)

# இலங்கை அதிபர் சேவையில் 4,600 வெற்றிடங்கள்

## நேர்முகத் தேர்வின் ஊடாக தகுதியானவர்களை இணைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

நீண்ட காலமாக அதிபர் பதவியில் பதில் கடமைகளை மேற்கொள்ளும் ஆசிரியர் சேவையில் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களுக்கும் நேர்முகத் தேர்வை நடத்தி அதிபர் சேவை தரம் III இற்கான நியமனங்களை வழங்கவேண்டுமென கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது இலங்கை அதிபர் சேவை I, II மற்றும் III இல் 4 ஆயிரத்து 600 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் தற்போது நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் போட்டிப் பரீட்சையோ அல்லது நேர்முகத் தேர்வையோ நடத்தி பதவி நியமனங்களை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கும். எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு தற்போது நீண்ட காலமாக அதிபர் பதவியில் பதில் கடமைகளை மேற்கொள்ளும் ஆசிரியர் சேவையில் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களுக்கும் சேவையாப்பிற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் சேவையிலுள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் வாய்ப்புகளை வழங்கி இச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் போட்டிப் பரீட்சையை நடத்துவதற்குப் பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வை நடத்தி பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்காகவும் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கான நியமனங்களை வழங்குவதற்காகவும் கல்வி அமைச்சரின் யோசனைக்கு அமைச்சாரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி-4)

# க.பொ.த.உயர்தர மற்றும் சாதாரணதர பரீட்சை திகதியில் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பரீட்சைகளை நடத்துவதற்கான திகதிகளை திருத்த கல்வி அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, ஓகஸ்ட் மாதத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையையும், டிசெம்பரில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையையும் நடத்தும் திட்டம் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் கல்வி முறையை சீர்திருத்துவதற்கான நடவடிக்கையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் கபிலா பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மாணவர்கள் தேவையற்ற முறையில் பாடசாலைகளில் காலங்களை செலவிடுவதை கட்டுப்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த திட்டத்தை அடுத்த ஆண்டு முதல் செயற்படுத்தவும் கல்வியமைச்சு எதிர்பார்த்துள்ளது. (நி-4)

# மரண அறிவித்தல்

பிறப்பு
13 - 03 - 1968



இறப்பு
02 - 03 - 2021

## திருமதி லக்ஷ்மி நந்தகுமார்

பூதவராயர் கோவில் ஒழுங்கை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லக்ஷ்மி நந்தகுமார் நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - கமலவேணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் நந்தகுமாரின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரன், உமாமகேஸ்வரன், காலஞ்சென்ற அமலேஸ்வரன், லிங்கேஸ்வரன், அமுதாம்பிகை, நாகேஸ்வரன் மற்றும் ஜெயகாயத்திரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அருட்சுணன், இராசமலர், தெய்வமலர், தவமலர், சிவமலர், சிறிலதா, சாமினி, டோர்தி, பிருந்தா, தேவதாஸ், ஜேசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.03.2021) புதன்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை சந்தை,
பழக்கடை.

(C-1575)

தகவல்: குடும்பத்தினர்
வே.நந்தகுமார் (கணவர்)


# காணி விற்பனைக்கு

உரும்பிராய் பொக்கணை வீதியில் முருகன் கோவில் முன்பாக 10 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்து வழங்கப்படும். பலாலி வீதியில் இருந்து 500 மீற்றர் தூரம்.

(6001)

தொடர்பு:- 077 623 4204, 077 505 8561


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
02.07.1946

மறைவு
02.03.2021

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி மஞ்சுளா பிரேமதேவா
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்

## சின்னத்தம்பி முத்துராசா

அவர்கள் காலமானு செய்தியறிந்து
ஆழ்ந்த துயர் அடைவ்துடன் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கனகரத்தினம் ம.ம.வி

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
29.05.1938

மறைவு
02.03.2021

எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. பொ. வாகீசன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்

## திருமதி அழகம்மா பொன்னையா

அவர்கள் காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கனகரத்தினம் ம.ம.வி

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை கெங்காதரன்

**(காரை S. கெங்கா)**

**( முகாமையாளர் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், சங்கானை, பிரபல முன்னாள் ஆசிரியர் - இந்து நாகரிகம், விக்னா உயர் கல்லூரி, பட்டிமன்றப் பேச்சாளர் )**


வேதரடைப்பு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் விசுவர்த்தனை வீதி, பண்ணாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கெங்காதரன் நேற்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய மாவட்ட விவசாய போதனாசிரியர் ), காலஞ்சென்ற மீனாட்சி (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் தவமலரின் (இளைப்பாறிய கணக்காளர் - பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம், சங்கானை) அன்புக் கணவரும் ஜனகன் (ஆசிரியர் - யாழ்ற்றன் கல்லூரி), கமலறாஜ் (சமுர்த்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், காரைநகர்), கௌரீசன் (கொழும்பு), K.M. சுந்தர் (மாணவன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இலக்குமிகந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - திருகோணமலை), திருமகள் (கிராம சேவையாளர் - பிரதேச செயலகம், காரைநகர் ) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வினித்தா (ஆசிரியை - யாழ். இந்துக் கல்லூரி ), தர்ஷனா (ஆசிரியை - பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), அம்பிகா (உள்ளக பயிற்சி ஆசிரியை - காரை இந்துக் கல்லூரி ), செந்தூரன் (நிகழ்ச்சித் தொகுப்பாளர் - சூரியன் FM, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் லாவண்யன், யசோதரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் கீர்த்தி நாத்தின் பாசமிகு பேரனும் தங்கமணியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.03.2021) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் விசுவர்த்தனை வீதி, பண்ணாகத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1579)



விசுவர்த்தனை வீதி, 077 502 7444
பண்ணாகம். 077 124 8120

தகவல்:
குடும்பத்தினர்

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்துங்கள்

## அன்புமணி இராமதாஸ் கோரிக்கை

**(சென்னை)**

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் பாரப்படுத்துமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் அன்புமணி இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு ஆற்றிய உரையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையின் வடக்கு, கிழக்கில் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகங்களை நிறுவ வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அடிப்படை உரிமைகளுக்காகவும் ஜனநாயக அதிகாரத்துக்காகவும் பெரும் போராட்டத்தை சந்தித்துள்ளனர்.

இலங்கையின் இனவெறி அரசாங்கம் அவர்களது வேண்டுகோளை நிராகரிப்பதுடன் மாத்திரமல்லாமல் அவர்களை தொடர்ச்சியான இனவெறி துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தி வருவதுடன் இனச்சுத்திரிகரிப்பு,திட்டமிடப்பட்ட இன அழிப்பு ஆகியவற்றையும் முன்னெடுத்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் கள அலுவலகங்களை இலங்கையின் வடக்கு,கிழக்கில் ஏற்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் அச்சமின்றி வாழும் நிலையை ஏற்படுத்தலாம்.

இலங்கையை, பொருத்தமான சர்வதேச பொறிமுறையை உருவாக்குவதன் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும்.

குற்றங்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச சுயாதீன பொறிமுறையை உருவாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# கொவிட் சடலங்கள் இரணைதீவில் அடக்கம்

## ஹக்கீம் எதிர்ப்பு

(கொழும்பு)

இரணைதீவில் கொவிட் சடலங்களை அடக்கம் செய்யும் தீர்மானம் இன பாகுப்பாட்டை ஏற்படுத்தும் என்ற வகையில், பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொவிட்-19 நோயால் உயிரிழக்கின்றவர்களின் சரீரங்களை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைதீவில் அடக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

ஆனால் இந்த விடயத்தில் ஏற்கனவே அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாடு சரியானது என நிரூபிப்பதற்கான முயற்சியாகவே இது அமைகிறது என்றும் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார். (நி-4)


## தவறவிடப்பட்டுள்ளது

கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்ட இ.குணசீலன் என்பவருடைய மோட்டார் வாகன வரிப் பத்திரம் மற்றும் காணி உறுதிப் பத்திரங்கள் அடங்கிய செம்மஞ்சள் கைப்பை ஒன்று 27.02.2021 அன்று கைதடிக்கும் நாவற்குழிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு:- 317/10, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.**
**077 666 5820**

(5972)



## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சுன்னாகம் 31.07.2020 இல் உள்ளவாறான கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்

சங்கத்தின் 2019/2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிப்பதனால் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ள இக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் கீழ் குறிப்பிட்ட நாட்களில் அக்கிராமிய வங்கிக்கு சமுகம் தந்து தங்கள் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். மேலும் கணக்குகளை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் | பார்வையிடும் திகதி | பார்வையிடும் நேரம் |
|---|---|---|
| ஏழாலை கிராமிய வங்கி | 15.03.2021 திங்கள் | காலை 10.00-பி.ப. 4.00 |
| குப்பிழான் கிராமிய வங்கி | 15.03.2021 திங்கள் | காலை 10.00-பி.ப.4.00 |
| இணுவில் கிராமிய வங்கி | 16.03.2021 செவ்வாய் | காலை 10.00-பி.ப. 4.00 |
| சுன்னாகம் கிராமிய வங்கி | 16.03.2021 செவ்வாய் | காலை 10.00-பி.ப.4.00 |

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.

(C-1572)



## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் வருடாந்த பொதுக்கூட்டம் 2021

FWC

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறு நிலையத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் 17.03.2021 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**வெளிக்கள நிலை அலுவலகம்**
**133 செம்மணி வீதி நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**ஆ.கதிர்காமநாதன்**
**செயலாளர்.**

(5988)



## 4ஆம் ஆண்டு நினைவில்...

அமரர்.
**கிருஸ்ணர் சிவக்கொழுந்து**



திதி : மாசி அபரபக்ஷ பஞ்சமி

எம் வாழ்வில் ஊன்று கோலாய்
எம் உள்ளத்தின் வெளிச்சமாய்
வழிகாட்டினாயே ஐயா...
உனை நினைக்கையில்
கண்ணீர் மட்டுமே ஆறுதலாய்
நான்காண்டு சென்றதுவோ...

பிறப்பு 28.06.1937
இறப்பு 15.02.2017

குடும்பத்தினர்.
அண்ணா சிலையடி,
கரணவாய்.

(C-1571)



## நோத்சீ லிமிடெட்

(கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம்)

NSL

# வெற்றிடங்கள்

### 1. தொழிற்சாலை முகாமையாளர் பதவி

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03**

இடங்கள் - லுணுவில, வீரவில மற்றும் யாழ்ப்பாணம்

சம்பள அளவு - MM 1 – 1 2016 – Grade II – 53,175 – 10x1375 – 15x1910 – 95,575/-

வயது - 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயது எல்லை பொருந்தாது.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட B.Sc. பொறியியல் (இயந்திரவியல்) துறையில் பட்டம்.
மற்றும்
முதல் பட்டத்தை பெற்ற பின் பதவி சார்ந்த துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவம்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பொறியியல் நிறுவகம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவி சார்ந்த துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் பிரிவு (JM 1-1) பதவி ஒன்றில் குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**நியமனத்தின் பண்பு**

மேலுள்ள பதவி ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. இற்கு உரித்துடையது என்பதுடன் மூன்று ஆண்டு தகுதிகாண் காலத்தைக் கொண்டதாக நிரந்தர அடிப்படையிலானது.

### பொது நிபந்தனைகள்

- சிறந்த பண்புடன் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்ட இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- அரச திணைக்களங்கள்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளின் ஊழியர்களான அபேட்சகர்கள் குறித்த நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- இயந்திரவியல் பொறியியல் பின்னணியில் இருந்துவரும் விண்ணப்பங்கள் விரும்பத்தக்கவை.

முந்தைய தொழில் அனுபவத்துடன் கல்வி / தொழில் அனுபவத்தை இணைத்த உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரத்துடன் தமது முழுமையான சுயவிபரக்கோவையை கொண்ட விண்ணப்பங்களை 2021 மார்ச் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு தலைவர், நோத்சீ லிமிடெட், இல. 450, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரி இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

**தலைவர்**
**நோத்சீ லிமிடெட்**

(C-1561)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு மாதகல் பாணவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ செ.சுந்தரேஸ்வரசர்மா குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச்செய்யப்படும். (5-4)




# அனைத்து வகையான இரத்தத்திற்கும் தட்டுப்பாடு

# குருதி வழங்க முன்வாருங்கள்

## வைத்திய நிபுணர் மதுராங்கி வேண்டுகோள்



(குப்பிழான்)

**நாடளாவிய ரீதியில் இரத்தச் சேகரிப்பில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போது அனைத்து வகையான இரத்தத்திற்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.**

கொவிட்- 19 பெருந்தொற்றுக் காரணமாக கடந்த ஒரு வருட காலமாக திட்டமிட்ட பல நடமாடும் இரத்ததான முகாம்களை எங்களால் நடத்த முடியாமல் போயுள்ளது. அதுமாத்திரமன்றி திடீரெனப் பல இடங்களிலும் கொரோனாத் தொற்று நோயாளர்கள் கண்டறியப்பட்டமையாலும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட பல இரத்ததான முகாம்களைத் திடீரென நிறுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு அனைவரும் குருதி வழங்க முன்வர வேண்டும் எனவும் வடபிராந்திய குருதி மாற்று பிரயோக வைத்திய நிபுணர் திருமதி மதுராங்கி கிருஸ்ணபிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல நோயாளர்கள் குறிப்பாக கர்ப்பிணிகள், சிறுவர்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் இரத்தம் ஏற்றுவதில் தங்கியிருக்கும் நோயாளர்கள் எனப் பல நோயாளர்கள் இரத்தம் ஏற்றும் மருத்துவ முறையை நம்பியிருக்கிறார்கள்.

எனவே, 18 வயதுக்கும் மேற்பட்ட 50 கிலோ மற்றும் அதனைவிடக் கூடிய நிறையுடையவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அல்லது உங்கள் பகுதிக்கு அருகில் உள்ள எந்தவொரு இரத்த வங்கியின்ருடனும் தொடர்பு கொண்டு காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இரத்ததானம் வழங்க முடியும்.

அல்லது **Nbts.life** எனும் இணையத்தளத்தின் ஊடாக முன்பதிவு செய்து கொண்டும் உங்களுக்குப் பொருத்தமான நேரத்தில் இரத்ததானம் செய்ய முடியும்.

இரத்ததானம் செய்தால் உடல் நிறை கூடுமா? , எங்கள் உடல் நலனுக்கு ஏதும் பாதிப்பு வருமா?, எங்கள் உடல் பலமில்லாமல் போகுமா? போன்ற பல அபிப்பிராயங்கள், சந்தேகங்கள் எங்கள் சமூகத்தில் பல பேர் மத்தியில் காணப்படுகின்றன. எந்தவொரு ஆதாரமுமில்லாத பிழையான அபிப்பிராயங்கள், சந்தேகங்களாகவே இவை காணப்படுகின்றன.

எனவே, இரத்ததானம் செய்வதால் உடலுக்கு எந்தவொரு தீங்குகளும் ஏற்படப் போவதில்லை. குருதிக் கொடையாளர்களின் உடல்நலனைக் கருத்திற் கொண்டு தான் நாங்கள் இரத்ததானம் பெற்றுக் கொள்வோம். எனவே, அனைவரும் பயமின்றி இரத்ததானம் வழங்க முடியும்.

நீங்கள் இரத்ததானம் செய்வதற்குச் செலவளிக்கும் 15 நிமிடங்கள் மூன்று உயிர்களைக் காக்கும் வல்லமையுடையது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18-33)

# யாழ்.பல்கலையில் இடம்பெற்ற நினைவுப் பேருரைகள்



(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து இடம்பெறும் நினைவுப் பேருரைகளின் வரிசையில் சேர். பொன். இராமநாதன், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி. வசந்தி அரசரட்ணம் "கல்விப் புலத்தில் பெண்கள் - இலங்கைப் பல்கலைக்கழகங்களைத் தழுவிய பார்வை" என்ற தலைப்பில் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையையும், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம், "யாழ்ப்பாணக் கோட்டையின் அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகள் - ஒரு புதிய பார்வை" என்ற தலைப்பில் சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரையையும் ஆற்றினர்.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் எஸ். பாலச்சந்திரன், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர். (5-4-33)

# மக்களின் நலனில் அக்கறைகொண்டு தெருவிளக்குகளை ஒளிரவிடுங்கள்

## பிரதேச சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கைதடிப் பகுதியில் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்படும் தெருவிளக்குகளை திருத்துவதற்கு சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என சபை உறுப்பினர் திருமதி தி.கலைவாணி கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் அதிகளவான தெரு விளக்குகள் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் ஒளிராமல் உள்ளன.

இதனால் இரவு வேளைகளில் வீதிகளில் விபத்துக்கள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறும் அபாயமுள்ளது.


குறிப்பாக கைதடியில் அரைவாசிக்கு மேலான தெரு விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பிரதேசசபை மக்களின் பாதுகாப்புக் கருதி பழுதடைந்த தெரு விளக்குகளை உடனடியாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தனது பிரேரணையில் குறிப்பிட்டிருந்தார். (5-4-30)



விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இளவாலைச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள **ITS Computer Center** மண்டபத்தில் இரத்ததானம் இடம்பெற்றது. 32 குருதிக் கொடையாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் செயதனர். (படம்: ரவிசாந்)





உரும்பிராய் லயன்ஸ் கழகமும் நீர்கொழும்பு லயன்ஸ் கழகமும் இணைந்து மண்டைதீவு சென்.பீற்றர் தேவாலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை சிறுவர்கள், கர்ப்பவதிகளுக்கான சத்துணவு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கின. இதில் இலங்கை அனைத்து மாவட்டங்களின் லயன்ஸ் கழகங்களின் தலைவர் லயன் தேவா பீற்றர் மற்றும் யாழ்.மாவட்ட லயன் கழக உறுப்பினர்களும் நீர்கொழும்பு லயன்ஸ் கழக உறுப்பினரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை தொடர்பான தீர்மானம் அடுத்த வாரம் சமர்ப்பிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பான தீர்மானம் அடுத்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பிரித்தானியா தலைமையிலான உறுப்பு நாடுகளினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் இந்த தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரிப்பதாக பேரவையில் அறிவித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்படும் குறித்த பிரேரணை மீது வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு ஆதரவளிக்கும் நாடுகளில் சீனா, ரஷ்யா, கியூபா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இருப்பதாக வெளிவிவகார அமைச்சின் உயர் வட்டார தகவல் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இந்தியா தனது ஆதரவை இதுவரை தெரிவிக்கவில்லை என்பதுடன், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த, இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 15 நாடுகள் தீர்மானத்தை நகர்த்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுக்கள் குறித்தும் முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு விடுக்கப்படும்.

அத்தோடு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றின் சுயாதீன செயற்பாட்டை உறுதிப்படுத்தவும் குறித்த தீர்மானம் அரசாங்கத்தை கோரும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# முத்துராஜவெல சுற்றாடலை பாதுகாக்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை



(கொழும்பு)

வாக்குறுதி வழங்கப்பட்டதை போல முத்துராஜ வெல சுற்றாடலை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்து கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை தனது கண்டனத்தை வெளி யிட்டுள்ளார்.

சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர, வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சிறிபால அமரசிங்க ஆகியோரின் பங்குபற்றுதலுடன், ஜனவரி 21 ஆம் திகதி பேராயர் இல்லத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாக பேரா யரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்துராஜவெல சுற்றாடலில் எவ்வித செயற்றிட்டங்களுக்கோ அல்லது தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கோ சந்தர்ப்பம் வழங்கப்படாது என இந்த கலந்துரையாடலின் போது உறுதி வழங்கப்பட்டதாக பேராயர் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

எனினும், வழங்கப்பட்ட உறுதியை மீறி முத்துராஜ வெல மற்றும் அண்மித்த கிராமங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கொண்டு வருவதாக வெளி யிடப்பட்ட உத்தியோகபூர்வ தீர்மானத்தை கடுமையாக எதிர்ப்பதாகவும் பேராயர் தெரிவித்துள்ளார்.

இதனால், தனியார் நிறுவனங்களினால் எதேச்சகரமாக உரிமை கோரப்பட்டு இடப்பட்டுள்ள பதாகைகளை அகற்றி, முத்துராஜ வெல தேசிய சரணாலயத்தை மீண்டும் வனஜீவராசிகள் பாதுகாப்பு வலயமாக பெயரிடுமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை தனது அறிக்கையினூடாக கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 11 சூரி 9 இல்<br>உயரம்: 5 1/2<br>தகைமை/தொழில்: BA(Hons)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிப்பெண் அரச உத்தியோகம், உள்நாடும்,வெளிநாடும்<br>தொ.இ: B/11527 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23 1/4 செவ் 2 சூரி 5 ல்<br>உயரம்: 5.4<br>தகைமை/தொழில்: BA,PGDE நிரந்தர ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச தொழில், உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11592 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 12 சூரி 11 இல்<br>உயரம்: 5.6<br>தகைமை/தொழில்: M.B.B.S Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர்<br>தொ.இ: B/11528 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: செவ் 6 சூரி 8 இல்<br>தகைமை/தொழில்: Canada and USA-BSC, Canada PR உண்டு<br>எதிர்பார்ப்பு: கனடா மட்டும், படித்தவர்,PR தேவை<br>தொ.இ: G/11594 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 1 சூரி 11 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, work- Security<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11531 | பிறப்பு: 1990 கத்தோலிக்கம்<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 34 1/2 செவ் 1 சூரி 7இல்<br>உயரம்: 5.5<br>தகைமை/தொழில்: ICT Diploma,Work-நிரந்தர முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன், மணமகள் விவாகரத்தானவர், திருமணமாகி 1 வாரத்துக்குள் விவாகரத்து ஆனவர். சைவமும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/11597 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 10 சூரி 11 இல்<br>உயரம்:165cm<br>தகைமை/தொழில்: A/L, நிரந்தர வியாபாரம்.<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: B/11532 | பிறப்பு: 1995 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: செவ் 1 சூரி 11ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L , Super Market America PR உண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாடும், வெளி நாடும்<br>தொ.இ: G/11600 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# திருமலை எண்ணெய்த்தாங்கி விவகாரம் விரைவில் தீர்வு என்கிறார் கெஹலிய



(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான பதில் வெகுவிரைவில் அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வெகுவிரைவில் இதற்கான பதிலை வழங்க முடியும்.

அமைச்சர் உதய கம்மன்பில இது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். குறித்த செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டவுடன் , அரசாங்கம் தீர்மானத்தை அறிவிக்கும்.

வெவ்வேறு முதலீடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. முதலீட்டாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

அதற்கேற்ப நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாவனைக்கு உதவாத முகப்பூச்சுக்கள்

(கொழும்பு)

கொழும்பு - டாம்வீதி பிரதேசத்தில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 50 இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பாவனைக்கு உதவாத ஒரு தொகை முகப்பூச்சுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவை பாகிஸ்தான், கொரியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என தகவல்கள் கிடைத்துள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் வத்தளை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் நீண்டகாலமாக இந்த முகப்பூச்சுகளை அவர் விற்பனை செய்துள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-4)

# விசேட ஏற்பாடுகளுடன் மன்னாரில் பரீட்சை எழுதும் மாணவர்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் கொரோனா தொற்றின் முதல் நிலை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 2 மாணவர்கள் பாடசாலையில் தனிப்பட்ட ஒரு பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றி வருவதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 271 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் மாத்திரம் 254 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் க.பொ.த. சாதாரண தர பரீட்சை சுகாதார நடைமுறைகளுடன் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த பரீட்சைக்கு தோற்றுகின்ற 2 மாணவர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் முதல் நிலை தொற்றாளர்களாக உள்ள நிலையில் அவர்கள் பாடசாலையில் தனிப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை சுகாதார பிரிவினர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

மேலும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நபருடன் ஒரே வீட்டில் தங்கி இருந்த ஒரு மாணவன் விசேட ஒழுங்குகளுடன் பரீட்சைக்கு தோற்றுகின்றார்.

மன்னார் மாவட்டத்தில் மாணவர்கள் எவரும் தொற்றுடன் காணப்பட்டால் அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு விடத்தல்தீவு வைத்திய சாலை பரீட்சை மண்டபமாக அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (5-4-285)

# நகருக்குள் வெடி கொளுத்த தடை

## பிரதேசசபைத் தவிசாளர்

(அக்கராயன்)

**வீட்டிலும் மயானத்திலும் இடையில் இரு இடங்களிலும் வெடி கொளுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் என பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் இடம்பெறும் மரணச்சடங்கின் இறுதி ஊர்வலத்தின் போது கிளிநொச்சி நகரிற்குள் செல்லாமல் மாற்றுவழிகளை பயன்படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதி ஊர்வலங்கள் கிளிநொச்சி நகரத்தின் ஏ-9 வீதியில் நகர்வதன் காரணமாக போக்குவரத்துகள் பாதிக்கப்படுகின்றன.

திருநகர் மயானத்திற்கான இறுதி ஊர்வலங்கள் இயன்றவரை மாற்றுவழிகளை பயன்படுத்தி நகரிற்குள் இறுதி ஊர்வலங்கள் வராமல் செல்வதற்கான தீர்மானங்கள் பிரதேச சபையில் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தல்கள் 15 நாட்களில் அறிவிக்கப்படவுள்ளன. இறுதி ஊர்வலங்களில் நான்கு இடங்களில் மட்டும் வெடிகள் கொளுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

வீட்டிலும் மயானத்திலும் இடைவெளியில் இரு இடங்களிலும் என மொத்தமாக நான்கு இடங்களில் மட்டும் மக்களுக்கு இடையூறு இன்றி வெடிகள் கொளுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார். (5-4-350)

# மணல் அகழ்வை தடைசெய்யுமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு பேராறில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக சூழலியல் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கற்சிலைமடுப் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இம்மணல் அகழ்வினைத் தடுக்காவிட்டால் எதிர்காலத்தில் பயிர்ச்செய்கை முயற்சிகள் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் பேராறில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் ஆற்றின் இரு பக்கமும் உள்ள மரங்கள் அழிக்கப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தடுப்பதற்கு கற்சிலை மடுவில் உள்ள பொது அமைப்புக்களிடமோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடமோ சட்டரீதியாக மணல் அகழ்வினை ஒப்படைப்பதன் மூலம் ஆற்றில் நடைபெறுகின்ற பொறுப்புக்களை கண்காணிக்க முடியும்.

தற்போது எந்தவிதமான கண்காணிப்பும் இல்லாமல் மணல் அகழ்வு நடைபெற்று வருகிறது.

பேராறில் இடம்பெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கற்சிலைமடு பொது அமைப்புகள் வலியுறுத்துகின்றன. 5-4-350)




# இழப்பீட்டுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன



(பனிக்கன்குளம்)

நிதி அமைச்சின் கீழ் இயங்கும் இழப்பீட்டு அலுவலகத்தின் ஊடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன்தலைமையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் பங்குபற்றலுடன் மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 30 பயனாளிகளும், புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 26 பயனாளிகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 49 பயனாளிகளும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 பயனாளிகளும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 25 பயனாளிகளுமாக மாவட்டத்தில் 145 பயனாளிகளும் பொது இடங்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு நான்குமாக 149 இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான 10.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் மற்றும்பயனாளிகளின் இருப்பிட தொலைவுத்தன்மை கருதி முதற்கட்டமாக நேற்று முன்தினம் கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பயனாளிகளுக்கான காசோலைகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வழங்கி வைத்தார். (5-4-281)



இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளைக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டு பங்கு சந்தை முதலீட்டில் வட மாகாண மக்களின் ஆர்வம், வடமாகாணத்தில் பங்குச்சந்தை செயற்பாடுகளின் முன்னேற்றம், புதிய முதலீட்டாளர்களின் ஆர்வம் என்பன தொடர்பாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனை (CSE)யாழ்.கிளையின் முகாமையாளர் ச.சபானந்தனுடன் கலந்துரையாடினார்

## இராசிபலன்

03.03.2021
மாசி 19, புதன்கிழமை
சதுர்த்தி காலை 7.00 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 4.38 மணிவரை
சித்திரை காலை 7.14 மணிவரை
சுவாதி பின்னிரவு 5.35 மணிவரை
சுபநேரம் 4.57-6.27 மணிவரை
இராகுகாலம் 12.27-1.57 மணிவரை
சந்திராஷ்டமம்:- ரேவதி

வளவன்


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் பெருகும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு.


மிதுனம்

பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.


கடகம்

தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


கன்னி

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


துலாம்

புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


விருச்சிகம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவான நாள்.


தனுசு

நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


மகரம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமாக அமையும், செய்தொழில் மேன்மையுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆரோக்கியமான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்

எதையும் பலமுறை யோசித்து செயற்படுவது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை,

சட்டம் கெடுத்தாலும் பழக்க வழக்கம் வாழ வைக்கும்

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1,000 ரூபா சம்பளத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

முதலாளிமார் சம்மேளனத்தின் ஆட்சேபனைக்கு மத்தியில், சம்பள நிர்ணய சபையில் நேற்றுமுன்தினம் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளம் வழங்கப்படுவதை ஆட்சேபித்து பெருந்தோட்ட நிறுவனங்கள் சார்பில் 197 ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-4)

# அடக்கம் செய்வதற்கான வழிகாட்டல்களை விரைவில் வெளியிடவும்-சர்வதேச மன்னிப்புச்சபை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, அதன்போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்களை விரைந்து வெளியிடுமாறும் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், "சடலங்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்குவது வெகுவாகக் காலந்தாழ்த்தப்பட்டிருந்தாலும் தற்போது அதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

முஸ்லிம் சமூகத்தினரின் மத ரீதியான நம்பிக்கையையும் உரிமையையும் மறுக்கும் வகையில் கட்டாயத் தகனத்தை நடைமுறைப்படுத்துவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

எனவே சிறுபான்மையினமான முஸ்லிம் சமூகத்தினரின் மத ரீதியான உரிமையைப் புறக்கணிக்கின்றதும் விஞ்ஞான ரீதியில் எவ்விதத்திலும் நிரூபிக்கப்படாததுமான ஒரு தீர்மானம் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளமை உண்மையில் வரவேற்கத்தக்கதாகும்.

கட்டாயத்தகனம் தொடர்பான தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், முஸ்லிம் சமூகத்தின் உறுப்பினர்களுக்குத் தற்போதைய தீர்மானம் ஆறுதலை அளித்திருக்கும்.

எனினும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பான வழிகாட்டல்களை வெளியிடுவதில் தாமதம் காண்பிக்கப்பட்டுவரும் நிலையில், அதனை உடனடியாக வெளியிட வேண்டும்.

சிறுபான்மையின முஸ்லிம்களைப் புறந்தள்ளும் வகையிலான எவ்வித நடவடிக்கைகளும் இனியும் மேற்கொள்ளப்படக்கூடாது என வலியுறுத்துகின்றோம்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# மேற்கு முனைய அபிவிருத்திக்கு அனுமதி



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனம் ஜோன் கீல்ஸ் குழுமம் மற்றும் துறைமுக அதிகார சபை ஆகியவற்றுடன் இணைந்து அரச மற்றும் தனியார் வர்த்தகமாக முன்னெடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

35 வருடங்களில் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தல் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தங்களுக்கு இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து முதலீட்டாளர்களை பரிந்துரைக்குமாறு கூறியிருந்த நிலையில், இந்தியாவிடமிருந்து மாத்திரம் முதலீட்டாளருக்கான உடன்பாடு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# 30 வயதிற்கு மேல் அனைவருக்கும் தடுப்பூசி

(கொம்பு)

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கொரோனாக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை 5 இலட்சத்து 9 ஆயிரத்து 275 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. (நி-4)




# முட்டாள் வேலைக்காரன்



ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனாக இருந்தாலும்அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான் அவன்.

ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக் கொண்டு பனங்காட்டுக்குச் செல், அங்கே பலர் பனை மரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக் கொண்டு வா!" என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக்கொண்டு இருந்தனர். சிலர் கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.


"என்ன இவர்கள் எல்லோரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில்சரியாக விழும். வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!" என்று நினைத்தான்.

"என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதை இவர்களுக்குப் புரிய வைப்பேன்" என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம்வெட்டிக்கொண்டிருந்த மற்றவர்கள்,"ஏன் இவன் இப்படிப்பைத்தியக்கார வேலை செய்கிறான்!" என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், "சடசட"வென்ற சத்தத்துடன் சாய்ந்து வண்டியின் மீது வேக மாக விழுந்தது. அவ்வளவு தான், வண்டி உடைந்து போனது. வண்டியுடன் கட்டப்பட்டிருந்த மாடு கால்கள் உடைந்து உயிருக்குப் போராடியது. இதைக் கண்டு அவன் திகைத்துவிட்டான். தன்திட்டத்தில்என்ன குறைஎன்றுஅவனால்கண்டு பிடிக்க முடியவில்லை."என் திட்டம் நல்ல திட் டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய் விட்டது" என்ற முடிவுடன் வீடு திரும்பினான். (தொடரும்)

# மகாபாரதம்




## சிகண்டி

மாறி மாறி கண்ணீருடன் சால்வனிடமும், பீஷ்மரிடமும் முறையிட்டபடியே ஆறு வருடங்களைக் கழித்தாள் அம்பை. பின் இமய மலைச்சாரலை அடைந்து, அங்குள்ள பாகூத நதிக்கரையில் கட்டை விரலை ஊன்றி நின்று பன்னிரெண்டு ஆண்டுகள்கடுந்தவம் செய்தாள்.

முருகப் பெருமான் அவளுக்குக் காட்சி அளித்து அழகிய மாலை ஒன்றை கொடுத்து "இனி உன் துன்பம் தொலையும்" அழகிய இந்த தாமரை மாலையை அணிபவனால் பீஷ்மர் மரணமடைவார் என்று கூறி மறைந்தார்.

பின் அம்பை பல அரசர்களிடம் சென்று இந்த மாலை அணிபவர் பீஷ்மரைக் கொல்லும் வல்லமை பெறுவார். யார் பீஷ்மரைக் கொல்கிறார்களோ அவருக்கு நான் மனைவி ஆவேன். யாராவது இம்மாலையை வாங்கிக் கொள்ளுங்கள்" என வேண்டினாள்.

பீஷ்மரின் பேராற்றலுக்கு பயந்து யாரும் முன்வராதநிலையில்ஆண்டுகள்பலகடந்தன. ஆனாலும் அம்பை தன் முயற்சியைக்கைவிடவில்லை. பாஞ்சால அரசன் துருபதனை சந்தித்து துயரக் கடலில் மூழ்கியுள்ள என்னைக் கை தூக்கி விடுங்கள்" என்றாள்.

அவனும் பீஷ்மருடன் போராடும் ஆற்றல் எனக்கில்லை என்று ஒதுங்கினான். இனி ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையில் அம்மாலையை அம்மன்னனின் மாளிகையில் போட்டுவிட்டு "பெண்ணே! மாலை எடுத்துச் செல்" என்று கூறிய மன்னனின் வார்த்தைகளையும் புறக்கணித்து வெளியேறினாள் அம்பை.

துருபதனும் அம்மாலையை காத்து வந்தான். அம்பை பின் ஒரு காட்டிற்குச் சென்று அங்கு தவமிருந்த ஒரு முனிவரை சந்தித்தாள். அவர் அவளை பரசுராமரைப் பார்க்கச் சொன்னார்.


அம்பையும் பரசுராமரை சந்தித்து தன் நிலைமையை சொன்னாள். பரசுராமர் பீஷ்மரை சந்தித்து அம்பையை மணக்கச் சொல்ல பீஷ்மர் இணங்கவில்லை. ஆகவே இருவருக்குள் போர் மூண்டது.

இருவரும் வல்லமை மிக்கவர்கள் ஆனதால் யார் வெற்றி பெறு வார் எனக்கூற இயலாத நிலையில் பரசுராமர் விலகிச் சென்றார்.

(தொடரும்)

# 2050ம் ஆண்டுக்குள் நான்கில் ஒருவருக்கு செவித்திறன் பிரச்சினை ஏற்படும்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை




(ஜெனிவா)

2050 ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள் தொகையில் நான்கில் ஒருவர் செவித் திறன் பிரச்சினையால் பாதிக்கப்படுவார்கள் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

உலகளவில் செவித் திறன் பிரச்சினையால் பலர் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். பல்வேறு பாதிப்புகள் காரணமாக காது கேட்கும் திறன் குறைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலகம் முழுவதும் ஐந்தில் ஒருவர் செவித் திறன் பிரச்சினையால் அவதிப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நிலையில் 2050 ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள் தொகையில் நான்கில் ஒருவர் செவித்திறன் பிரச்சினையால் பாதிக்கப்படுவார்கள் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் உலக மக்கள் தொகையில் நான்கில் ஒருவர் 2050 ஆம் ஆண்டுக்குள் செவித்திறன் பிரச்சினையால் பாதிக்கப்படுவர்.


ஏனென்றால் இந்தப் பிரச்சினை சரியாக கவனிக்கப்படவில்லை. அடுத்த மூன்று தசாப்தங்களில் செவித்திறன் குறைபாடுள்ளவர்களின் எண்ணிக்கை 1 1/2 மடங்குக்கும் மேலாக அதிகரிக்கக் கூடும்.

செவித்திறன் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அதை தீர்ப்பதற்கான கவனிப்பு அணுகல் பற்றாக்குறை ஆகும். குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் சிகிச்சை அளிக்க குறைந்த வல்லுநர்களே உள்ளனர்.

இதுபோன்ற நாடுகளில் காது கேளமை உள்ளவர்களில் கிட்டத்தட்ட 80 சதவீதம் பேர் வசிக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான உதவிகள் பொது இடங்களில் சத்தத்தை குறைப்பதில் இருந்து காது கேளாமை மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகளை அதிகரிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு

### சீமான்



(சென்னை)

தமிழக சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர்,


"நாம் தமிழர் கட்சி எனும் அரசியல் பேரியக்கம் கடந்த 11 ஆண்டு காலத்தில் ஏற்படுத்திய தாக்கமும் அதிர்வுகளும் அபரிமிதமானது, அசாதாரணமானது.

முற்போக்கு அரசியலால் தமிழக அரசியலின் போக்கையே மொத்தமாய் மாற்றி அரசியல் திசையைத் தீர்மானிக்கிற பெரும் சக்தியாக நாம் தமிழர் கட்சி உருவெடுத்திருக்கிறது. வாக்கு அரசியலுக்காக வேலை செய்திடாது, நாளைய தலைமுறையினருக்கான மாற்று அரசியலை முன்வைத்து சமூகக்கடமை ஆற்றியது.

தற்போது தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில் இரு பெரும் திராவிடக் கட்சிகளான அ.தி.மு.கவும், தி.மு.கவும் பணத்தை வாரியிறைத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி வாக்குகளை வேட்டையாடும் சதிச்செயலை அரங்கேற்ற நிற்கின்றன.

இவற்றிற்கு முற்றிலும் நேர்மாறாக நற்கருத்துகளை மக்களிடையே விதைத்து அதன்மூலம் மக்களை அரசியல்படுத்தி அதனூடே வாக்குகளைப் பெற்று ஜனநாயகத்தை நிலைநிறுத்த போராடிக் கொண்டிருக்கிறது தமிழர் கட்சி என அவர் தெரிவித்தார். (நி-4)

## நம்பிக்கையளிக்கும் கொவிட் 19 தடுப்பூசிகள் உயிரிழப்புக்கள், பாதிப்புக்கள் குறைகின்றன



(கொழும்பு)

ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ராஜெனெகா அல்லது பைசர்-பயோஎன்டெக் கொவிட் தடுப்பூசிகளை ஒரு தடவை போட்டுக்கொண்டவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை தேவைப்படும் நிலை 80 வீதம் குறைவதாக பிரித்தானியாவில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

80 வயதிற்கு மேற்பட்டவர்களை அடிப்படையாகக் கொண்டு இங்கிலாந்து பொது சுகாதாரத்துறை இந்த ஆய்வை முன்னெடுத்தது. இந்த ஆய்வில் வெளியாகியுள்ள முடிவுகள் மிகவும் மகிழ்ச்சியளிக்கும் வகையில் உள்ளதாக பிரிட்டன் சுகாதார செயலாளர் மாட் ஹான்காக் தெரிவித்தார்.

இதுவரை 20 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இங்கிலாந்தில் முதல் கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இதில் மூத்த பிரஜைகள் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானவர்களாவர்.

இந்நிலையில் தடுப்பூசிகள் தொற்றுநோய்களைக் குறைக்கவும் உயிர்களைக் காப்பாற்றும் பங்கையும் சிறப்பாகச் செய்கின்றன என்பதற்கு இந்த ஆய்வு முடிவு வலுச் சேர்க்கிறது.

இதேவேளை, தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ள கொரோனாத் தடுப்பூசிகள் மருத்துவமனைகளில் சேருபவர்களின் எண்ணிக்கையையும் இறப்பையும் தடுக்கின்றன என்று உலக சுகாதார அமைப்பும் உறுதி செய்துள்ளது.

உலகம் முழுவதும் 10 வீதத்துக்கும் குறைவான மக்கள் கொரோனா வைரஸிக்கு எதிரான எதிர்ப்பு சக்தியைக் கொண்டுள்ளனர். 50% இற்கும் அதிகமானவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டபின் எதிர்ப்பு சக்தியைப் பெறுகின்றனர்.

தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் மருத்துவமனைகளில் சேருபவர்களின் எண்ணிக்கையையும் இறப்பையும் தடுக்கின்றன என உலக சுகாதார அமைப்பின் மூத்த விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (நி-4)

## பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதிக்கு சிறை

(பாரிஸ்)

ஊழல் குற்றத்திற்காக பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஸிக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது.

தமது அரசியல் கட்சிக்கு எதிரான குற்றவியல் வழக்கு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக, நீதவான் ஒருவருக்கு மொனாக்கோவில் உயர் தகைமை பதவி ஒன்றை வழங்க முயற்சித்ததன் ஊடாக, கையூட்டு வழங்கும் குற்றச்சாட்டில் 66 வயதான சர்கோஸி குற்றவாளியாக அடையாளங்காணப்பட்டிருந்தார்.

இதே குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளிகளாக அடையாளங் காணப்பட்டுள்ள குறித்த நீதவான் மற்றும் சர்கோஸியின் முன்னாள் சட்டத்தரணி ஆகியோருக்கும் அதே சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறைத்தண்டனைக் காலத்தை முன்னாள் ஜனாதிபதி சர்கோஸி சிறைக்குச் செல்லாமல், கண்காணிப்பின் கீழ் வீட்டிலேயே கழிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## ஜமால் கஷோக்கி கொலை விவகாரம்; சவுதி இளவரசர் தண்டிக்கப்பட வேண்டும்



(டோஹா)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியை கொலை செய்வதற்கு உத்தரவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சவுதி இளவரசர் தாமதமின்றி தண்டிக்கப்பட வேண்டும் என ஜமால் கஷோக்கி திருமணம் செய்துகொள்ள இருந்த ஹாடீஸா ஸெங்கிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'குற்றமற்ற, அப்பாவியான கஷோக்கியின் கொலைக்கு ஆணையிட்ட பட்டத்து இளவரசர் எந்த தாமதமும் இன்றி தண்டிக்கப்படுவது அவசியம்.

அது நாங்கள் கோரும் நீதியாக மட்டுமல்ல, இது போன்ற சம்பவங்களைத் தடுக்கும் செயலாகவும் இருக்கும்.

முடிக்குரிய இளவரசர் தண்டிக்கப்படவில்லை என்றால், அது என்றைக்கும் நம் அனைவருக்கும் ஆபத்தாக இருக்கும். மனித குலத்தின் மீது படிந்த கறையாக அது இருக்கும்.

அமெரிக்க ஜனாதிபதி பிடனில் தொடங்கி, உலகத் தலைவர்கள் அனைவரும் இளவரசர் முகமது பின் சல்மானுடன் கைகுலுக்கத் தயாராகவுள்ளனரா? என தங்களை தாங்களே கேள்வி கேட்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சவுதி இளவரசர் கஷோக்கியின் கொலையில் தனக்கு எந்த பங்கும் இல்லை என தெரிவித்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஜமால் கஷோக்கி துருக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்துக்கு சென்றபோது கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பன்னிரு இலங்கை மீனவர்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் அந்நாட்டு நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி கடந்த மாதம் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 மீனவர்களே நேற்று முன்தினம் நீதிமன்றத்தின் முன்னிலையில் இவ்வாறு ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் நளின் டி சில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்போது மீனவர்களுக்கான விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டதாகவும் கூறிய அவர், மீனவர்களின் உடல் நிலை நல்ல ஆரோக்கியத்துடன் இருந்ததாகவும் குறிப்பிட்டார்.பெப்ரவரி 11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் இரண்டு கப்பல்களில் மியன்மார் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவார்.

இதேவேளை இவர்களை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# காங்கேசன்துறை-காரைக்கால் கப்பல் சேவை விரைவில்



(சென்னை)

இந்தியாவின் காரைக்காலுக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கான ஒப்பந்தம் இந்திய அரசின் சாகர்மாலா அபிவிருத்தி நிறுவனத்திற்கும் இந்த்ரீ பயணிகள் கப்பல் தனியார் நிறுவனத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் டில்லியில் கைச்சாத்திடப்பட்டது.

இதில் சாகர்மாலா அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் திலீப்குமார் குப்தாவும் பயணிகள்கப்பல்சேவை சார்பில் சோ.நிரஞ்சன்நந்தகோபனும் கைச்சாத்திட்டனர்.

சாகர்மாலா அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கிடையிலும் பயணிகள் போக்குவரத்து சுமுகமாக தொடங்கியதும் இந்த கப்பல் சேவையை விரைந்து ஆரம்பிக்க இருப்பதாக நிரஞ்சன் தெரிவித்தார். (நி-8)

# ஊழல் மோசடி விசாரணை அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதி

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் கடந்த அரசாங்க காலகட்டத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதத்திற்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஆணைக் குழுவின் அறிக்கையும் குறித்த பாராளுமன்ற அமர்வின்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். (நி-4)

# பீதுறுதாலகாலமலை காட்டுப்பகுதியில் தீ



(கொழும்பு)

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பீதுறுதாலகால மலை காட்டுப்பகுதியில் தீ பரவியுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பரவிய தீ காரணமாக குறித்த காட்டுப் பகுதியில் சுமார் ஒன்றரை ஏக்கர் வரையான நிலப்பரப்பு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாராவது விஷமிகள் தான் இப்பகுதிக்கு தீ வைத்திருப்பதாக நுவரெலியா பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீயை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் விமானப் படையினரின் உதவி பெறப்பட்டு ஹெலிகொப்டர் மூலம் தீயை அணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2243

**இனியா**

அப்பா சர்வாதிகாரின்னா யாருப்பா?



இருடா, அம்மா உள்ளே போகட்டும் சொல்றேன்...

**கயன்**

பள்ளி விடுமுறை என்றவுடன் சுற்றுலா செல்லும் பிள்ளைகள் மத்தியில்



தன் வீட்டின் ஏழ்மை நிலையை மாற்ற உழைக்கும் குழந்தைகள் "வரமே"

**நிந்துஜன்**




எனக்கு இந்த உணவு பிடிக்கல என்பவர்கள் மத்தியில்

கடவுளே! இந்த உணவை தந்ததற்கு நன்றி!

**குமார்**

சாரதி : என்ன கொடுமை சேர் றோட்டில ஒரு மரத்தைக்கூடக் காணோம்...!

பயணி : வாவ்! நீங்க சமூக ஆர்வலரா சேர்?



சாரதி : இல்ல... வண்டியில பிரேக் பிடிக்க மாட்டேங்குது அதுதான்.

**சக்தி**

நம்ம Best பிறண்கிட்ட மட்டும் பொய்யே சொல்ல முடியாது



ஏன்னா அந்த நாய்க்கு நம்மளப் பற்றி எல்லா உண்மையும் தெரியும்

**றுக்மணி**

ஒரே ஒரு நாள் நெட்பேக் போடாம இருந்து பாருங்க



நீங்க எவ்வளவு வெட்டியா இருக்கீங்கன்னு உங்களுக்கே தெரியும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைக்கு அனுப்புவதாகக் கூறி லெபனானில் பண மோசடி

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**லெபனானில் உள்ள இலங்கை தொழிலாளர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்காக சிலர் பண மோசடியில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.**

இவ்வாறு தூதரகம் அரசாங்கத்தின் ஒப்புதலூடன் பணம் சேகரிக்கின்றதா? என்பது தொடர்பில் இலங்கையர்கள் பலமுறை தூதரகத்திடம் விசாரித்துள்ளனர்.

லெபனானில் உள்ள இலங்கை தொழிலாளர்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதற்கான நிதி திரட்ட எந்தவொரு தனி நபருக்கும் அல்லது அமைப்பிற்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதனால் இது போன்ற மோசடிக்காரர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தவிர்க்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரித்துள்ளது. (நி-4)

# அத்தியாவசிய சேவைக்குள் சுகாதார சேவை;

## பிரதமர் மகிந்த ஆலோசனை

(கொழும்பு)



புதிய அரசியலமைப்பு தொடர்பிலான வரைபில் சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக உள்ளடக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடன் அலரிமாளிகையில் நேற்று முன்னதினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

சுகாதார சேவை மற்றும் வைத்தியர்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முன்வைத்த யோசனைகள் குறித்த கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

இதன்போது புதிய அரசியலமைப்பு தொடர்பிலான வரைபில் சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக இணைக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் அனுரத்த பாதெனிய கோரியிருந்தார்.

அதற்கு பிரதமர் இணக்கம் வெளியிட்டிருந்ததுடன், அரச வைத்திய பீடத்திற்கு தெரிவாகும் வைத்தியர்களின் வயதெல்லையை 22 முதல் 23 ஆக குறைக்க கல்வி அமைச்சுடன் இணைந்து ஒன்றிணைந்த செயற்றிட்டம் ஒன்றினை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதேவேளை, கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஓகஸ்ட் மாதத்திலும் உயர்தர பரீட்சையை டிசெம்பர் மாதத்திலும் நடத்தும் புதிய யோசனைக்கு அனுமதியை பெற எதிர்வரும் வாரம் அமைச்சரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதன்போது தெரிவித்தார். (நி-4)

# பிளாஸ்ரிக் பொருட்களுக்கு இம்மாதத்துடன் தடை

## சுற்றாடல் அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)



இம்மாதம் 31 ஆம் திகதி முதல் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் வகைகள் சிலவற்றின் பாவனையைத் தடை செய்ய சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்திவிட்டு அகற்றப்படுகின்ற பொலித்தீன், பிளாஸ்ரிக் போத்தல், மைக்ரோ இருபதுக்கும் குறைவான பொலித்தீன், பெட் போத்தல், சம்போ பக்கெற், காட்டன் பட் மற்றும் காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருட்கள் என்பன இதனுள் அடங்கும்.

இந்த பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் அதிகமானவை சூழலுடன் சேர்வதால் இந்நாட்டில் அதிகமாக சூழல் மாசடைவு ஏற்படுவதுடன், குடிநீர் மற்றும் நீர் மாசடைகிறது.

எனவே இவ்வாறான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகள் சிலவற்றை மார்ச் 31 முதல் இலங்கையில் உற்பத்தி செய்ய மற்றும் விநியோகிக்க தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு பதிலாக சூழலுக்கு உகந்த பொருட்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாக சுற்றாடல் அமைச்சு பல்வேறு பிரிவினர்களுடன் கலந்துரையாடியுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## எல்லாம் முடியும்

ஒரு சின்னக் கிராமம். அங்கே இரண்டு பேர். சின்ன வயதிலே இருந்தே ஒன்றாக வளர்ந்தவர்கள். அந்த இரண்டு பேரில் ஒருத்தன் மட்டும் கொஞ்சம் வசதியுள்ளவன். கொஞ்ச நாள் பள்ளிக்கூடம் போனான், படித்தான்.

பின்பு அந்தக் கிராமத்தை விட்டு நகரத்திற்குப் போனான். வியாபாரம் செய்தான். பணம் சேர்ந்தது. பட்டணத்திலே பெரிய வீட்டைக் கட்டிக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டான்.

இன்னொருத்தன் கிராமத்திலேயே மாடு மேய்த்துக் கொண்டு இருந்து விட்டான். பள்ளிக்கூடம் போகவில்லை, படிக்கவில்லை. அந்தக் கிராமத்தைவிட்டு வெளியே எங்கும் போனதில்லை. அதனால் வெளி உலகமே தெரியாமல் வளர்ந்து விட்டான்.

இவன் ஒருநாள் பட்டணத்திற்குப் போக வேண்டியிருந்தது. தெரிந்தவர்கள் சிலபேரின் துணையோடு அங்கே போய்ச் சேர்ந்துவிட்டான். மெதுவாக தன்னுடைய பழைய நண்பன் இருக்கின்ற இடத்தையும் விசாரித்துக் கண்டு பிடித்து போய்ச் சேர்ந்து விட்டான்.

அவன் கட்டியிருந்த பெரிய வீட்டைப் பார்த்து அசந்து போய் நின்று விட்டான். அவன் இவனைப் பார்த்ததும் வாப்பா என்று சொல்லி உள்ளே கூட்டிக் கொண்டு போனான்.

இவன் மெதுவாக உள்ளே போனான். இவனுக்குப் புரியாத சமாச்சாரங்கள் என்னென்னமோ இருக்கு உள்ளே. நீ மிகவும் பெரிய ஆளாகிவிட்டாய் என்றான்.

எல்லாவற்றுக்கும் காரணம் நான்தான் என்றான் அவன். மிகப் பெருமையாகச் சொன்னான். அதுசரி... வெயிலில் இருந்து வந்ததால் மிகக் களைப்பாக இருக்கின்றது. ஒரு விசிறி மட்டை இருந்தால் கொடேன் என்று கேட்டான் இவன். விசிறி மட்டை எதற்கு? அது தேவை இல்லை. இதோ இப்பொழுது காற்று வீசச் சொல்கின்றேன் பார் என்று மின் விசிறி பட்டனை தட்டிவிட்டான். அது சுழல ஆரம்பித்தது. காற்று வந்தது. இவன் ஆச்சரியமாக அண்ணாந்து பார்த்தான்.

என்ன பார்க்கின்றாய். எல்லாம் என்னுடைய விரல் நுனியால் இதை தொட்டால் போதும். அது சுத்த ஆரம்பித்துவிடும் என்றான் அவன்.

நீ உண்மையிலேயே பெரிய ஆள் தான். அது இருக்கட்டும் இருட்ட ஆரம்பித்து விட்டதே. ஒரு சின்ன விளக்கு அல்லது மெழுகுவர்த்தி இருந்தால் கொண்டு வா என்றான்.

அது என்னத்திற்கு வெளிச்சமும் நான் சொன்னால் வரும் என்று சொல்லி ஒரு ஸ்விட்சைத் தட்டினான். உடனே பிரகாசமான வெளிச்சம். இவன் மிகவும் ஆச்சரியமாக அதைப் பார்த்தான். அவன் இதைக் கவனித்தான்.

என்ன ஆச்சரியப்படுகின்றாய்? இப்பொழுது பார் என்று சொல்லி வானொலி பெட்டியைப் போட்டான். அது பாட ஆரம்பித்தது. தொலைக் காட்சிப் பெட்டி சுவிட்சைத் தட்டிவிட்டான். அதிலே படம் வர ஆரம்பித்து விட்டதாம்.

பார்த்தியா என்னாலே எல்லாம் முடியும். எல்லாம் விரல் நுனியில் என்றான். அந்தச் சமயத்திலே தான் அது நடந்தது. அதாவது திடீர் என்று மின்சாரம் நின்று போய்விட்டது. பவர் கட் கிராமத்து ஆளுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஏன் இருட்டாகிவிட்டது? வெளிச்சத்தைக் கொண்டுவா? என்றான். மின்சாரம் போய்விட்டது. அதனால் விளக்கு எரியாது என்றான் அவன். இவனுக்கு அது புரியவில்லை. சரி அப்படி என்றால் விசிறியையாவது போடேன் என்றான், ரேடியோவையாவது பாட வையேன் என்றான். அதுவும் முடியாது என்றான்.

என்ன இப்படி சொல்கின் றாய்? விரல் நுனியால் என்னாலே எல்லாம் செய்ய முடியும் என்று சொன்னாய். நான்தான் எல்லாத்துக்கும் காரணம் என்றாய். இப்பொழுது அந்த நான் எங்கே போய் விட்டது? என்றான் இவன்.

அவன் தலையை தொங்கப் போட்டுக் கொண்டான். இன்றைக்கு நம்மிலே பலபேர் நினைப்பு இப்படித்தான் இருக்கு.அதனால்தான் அப்பப்ப அல்லாடிக் கொண்டிருக்கின்றோம்.

எங்கள் ஆள் ஒருத்தன். ஆஸ்பத்திரியில் படுத்திருந்தான். உடம்பு பூராக கட்டு. என்ன ஆகிவிட்டது என்று கேட்டார் அங்கே வந்த ஒருத்தர். இவன் தன்னுடைய விரல் நுனியைக் காட்டினான். இதுதான் சேர் காரணம் என்றான். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. என்னப்பா சொல்கின்றாய் என்றார்.

இந்த விரல் நுனியை எங்க வீட்டு சுவரிலே வைத்தேன். உடனே என்னை வைத்தியசாலையில் கொண்டு வந்து போட்டுவிட்டார்கள் என்றான். வீட்டுச் சுவரில் விரலை வைக்கிறது தப்பா? என்றார்.

விரலை வைக்கிறது தப்பு இல்லை சேர் அப்படி வைக்கிற இடத்தில் மின்சார வயர் தொங்கிக் கொண்டிருந்தது. அதுதான் தப்பு என்றான். இவன்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

19

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அதைத் தொடர்ந்து ட்ரம்ப் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களைப் புறக்கணிக்குமாறு தனது நிர்வாக அதிகாரிகளிடம் கூறி விசாரணையைத் தடுத்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றச்சாட்டு (அதிகாரம் மற்றும் தடை) பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிய போதும் செனட் சபை, காங்கிரஸின் "அதிகாரம் மற்றும் தடை" ஆகிய இந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து ட்ரம்பை பெப்ரவரி 5, 2020 அன்று விடுவித்தது.

### ட்ரம்புக்கு எதிரான இரண்டாவது அரசியல் குற்றச்சாட்டு

டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான இரண்டாவது அரசியல் குற்றச்சாட்டு தீர்மானம் அண்மையில் அமெரிக்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மை எம்.பிக்கள் ஆதரவுடன் நிறைவேறியது. அந்தத் தீர்மானத்தை 232 எம்.பிக்கள் ஆதரித்துள்ளனர். 197 பேர் எதிராக வாக்களித்துள்ளனர்.


**டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான இரண்டாவது அரசியல் குற்றச்சாட்டு தீர்மானம் அண்மையில் அமெரிக்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மை எம்.பிக்கள் ஆதரவுடன் நிறைவேறியது. அந்தத் தீர்மானத்தை 232 எம்.பிக்கள் ஆதரித்துள்ளனர். 197 பேர் எதிராக வாக்களித்துள்ளனர். குற்றச்சாட்டு என்னவென்றால் ட்ரம்ப் தான் ஜனவரி 6 ஆம் திகதி நடந்த பாராளுமன்றத் தாக்குதலுக்கான "கிளர்ச்சியைத் தூண்டினார்" என்பதாகும்.**

அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மீது ஜனவரி 6 இல் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ட்ரம்ப் தான் பொறுப்பு எனக் குற்றம்சாட்டி அவரைப் பதவியில் இருந்து நீக்க அந்நாட்டு பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.


இந்தத் தீர்மானம் மீது பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கப் பாராளுமன்றம் (கபிடல்) தாக்கப்பட்டற்காக ட்ரம்ப் மீது கொண்டுவரப்பட்ட ட்ரம்புக்கு எதிரான இரண்டாவது அரசியல் குற்றச்சாட்டு தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு தொடங்கியது. இப்போது எம்.பிக்கள் வாக்களித்தார்கள்.

குற்றச்சாட்டுத் தீர்மானம் என்னவென்றால் ட்ரம்ப் தான் பாராளுமன்றத் தாக்குதலுக்கான "கிளர்ச்சியைத் தூண்டினார்" என்பதாகும்.

**அரசியல் குற்றச்சாட்டை எதிர்கொண்ட ஜனாதிபதிகள்**



ஆண்ட்ரூ ஜோன்சன்



பில் கிளிண்டன்



ட்ரம்ப் (2 முறை)

தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் 232 எம்.பிக்கள் ஆதரித்து வாக்களித்துள்ளனர். இதில் 10 குடியரசுக் கட்சியினரும் அடக்கம். மசோதாவை எதிர்த்து 197 பேர் வாக்களித்துள்ளனர். இதன்மூலம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான 2 ஆவது கண்டனத் தீர்மானம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை எம்.பிக்கள் ஆதரவுடன் நிறைவேறி உள்ளது.

### ட்ரம்புக்கு எதிரான இரண்டாவது அரசியல் குற்றச்சாட்டு கண்டன தீர்மான வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார்

அமெரிக்க செனட் சபையில் இந்த வழக்கு விசாரணை நடந்தது. இதில், கடந்த ஜனவரி 6 ஆம் திகதி வன்முறையைத் தூண்டும் வகையில் பேசிய ட்ரம்புக்கு எதிராகச் செனட் சபையைச் சேர்ந்த குடியரசு கட்சியினர் 7 பேர் வாக்களித்தனர்.

அவர்கள் ஜனநாயகக் கட்சியினருடன் இணைந்து ட்ரம்புக்கு எதிராக நின்றனர். எனினும் அவர் சார்ந்த குடியரசுக் கட்சியினர் பலர் ட்ரம்புக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால், செனட் சபையில் 57-43 என்ற கணக்கில் ஆதரவு வாக்குகளைப் பெற்ற ட்ரம்ப் குற்றவாளி இல்லை எனத் தீர்ப்புக் கிடைத்து இந்த வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கண்டனத் தீர்மான வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் ட்ரம்ப் கூறுகையில், நம்முடைய அமெரிக்க வரலாற்றில் பெரிய சூன்ய வேட்டையின் மற்றொரு கட்டம் இது. எந்தவொரு ஜனாதிபதிக்கும் இது போல் நடந்தது இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க ஜனாதிபதிப் பதவியை இழந்த டொனால்ட் ட்ரம்ப், வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறினார்

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் தமது மனைவி மெலானியா ட்ரம்ப் உடன் அவர் மரைன் ஒன் ஹெலிகொப்டரில் மேரிலாந்து மாகாணத்தில் உள்ள ஜாயின்ட் ஆண்ட்ரூஸ் எனும் இராணுவத் தளத்துக்கு சென்றார்கள். மரைன் ஒன்று **(Marine One)** ஹெலிகொப்டரில் ஏறும் முன் அங்கு இருந்த செய்தியாளர்களிடம் மிகவும் குறுகிய நேரம் பேசினார் ட்ரம்ப்.

"வெள்ளை மாளிகை உலகின் மிகச்சிறந்த வீடு" என்று அவர் அப்போது கூறினார். தனது மனைவி அருகில் இருந்த போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், "எங்களுக்கு மிகச்சிறந்த நான்காண்டுகள் இங்கு இருந்தன.இதன்போது பலவற்றையும் சாதித்தோம். நாங்கள் அமெரிக்க மக்களை நேசிக்கிறோம். இது மிகவும் சிறப்பானது" என்று கூறினார்.

மரைன் ஒன்று என்பது அமெரிக்காவின் ஜனாதிபதியைச் சுமந்து செல்லும் எந்த அமெரிக்காவின் மரைன் கார்ப்ஸ் **(Marine Corps)** விமானத்தின் அழைப்பு அறிகுறியாகும்.

துணை ஜனாதிபதியை ஏற்றிச் செல்லும் எந்த மரைன் கார்ப்ஸ் விமானத்திற்கும் மரைன் இரண்டு **(Marine Two)** என்ற அழைப்பு அடையாளம் உள்ளது.

ஆண்ட்ரூஸ் எனும் இராணுவத் தளத்தில் ட்ரம்புக்கு இறுதியாக பிரியாவிடை நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்பு அமெரிக்க ஜனாதிபதியின் ஏர் போர்ஸ் ஒன்று விமானம் மூலம் ட்ரம்ப் புளோரிடா கிளம்பினார்.

ட்ரம்ப், மெலனியா ஆகியோர் புளோரிடா சென்ற பின்பு அமெரிக்க ஜனாதிபதி பயணிப்பதற்கு என்றே பிரத்தியேகமான ஏர் போர்ஸ் ஒன்று விமானம் மீண்டும் மேரிலாந்து திரும்பும்.

ஏர் ஃபோர்ஸ் ஒன்று **(Air Force One)** என்பது அமெரிக்காவின் ஜனாதிபதியை ஏற்றிச் செல்லும் அமெரிக்காவின் விமானப்படை விமானத்திற்கான அதிகாரப்பூர்வ விமான போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அழைப்பு அடையாளமாகும்.

ஆண்ட்ரூஸ் இராணுவ தளத்தில், தமது ஆதரவாளர்களுக்கு மத்தியில் தமது பிரியாவிடை உரையாற்றிய ட்ரம்ப் தமது குடும்பத்தினர் மற்றும் அணியினருக்கு நன்றி கூறினார். தமது ஆட்சிக் காலத்தின் போது நிகழ்த்தப்பட்ட சாதனைகள் என்று சிலவற்றை அவர் பட்டியலிட்டார்.

கடைசி சில நாட்களாக அவர் நல்ல மனநிலையில் இல்லை, எரிச்சலாக உள்ளார் என்பது போல சில அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன. ஆனால் ட்ரம்ப் ஆற்றிய உரை அதற்கு முரணாக இருந்தது.

இவ் உரையின் போது அவர் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டார். அவரது ஆதரவாளர்களுக்கும் உற்சாக மூட்ட அவர் முயற்சித்தார். அவரது பிரியாவிடை உரை ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சி போலவே இருந்தது. அது சோகமானதாக இல்லை. ஏதாவது ஒரு வகையில் நாம் மீண்டு வருவோம் என்று இறுதியில் குறிப்பிட்டு தன் உரையை முடித்திருந்தார்.

(தொடரும்...)

# தடுப்பூசி பெற்றுக்கொண்ட சிலருக்கும்

## கொரோனா தொற்று உறுதி - சுதர்ஷனி

(கொழும்பு)

கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பூசி பெற்றுக் கொண்ட சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தடுப்பூசி ஏற்றப்பட்டு 3 வாரங்களுக்கு பின்னரே நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றப்பட்டு 3 வாரங்களுக்குள் சிலருக்கு மாத்திரமே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தங்களின் பொது சுகாதார பரிசோதகரின் உதவியுடன் கிராம உத்தியோகத்தருக்கு அறிவித்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு முன்னுரிமை வழங்கி, தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு

# ஏன் - எதற்கு - எப்படி



## திருமண யோகம் தரும் தெய்வத் திருமணங்கள்!

**ஆ**லயங்களில் இறைவழிபாடு தவிர அது தொடர்புடைய எத்தனையோ திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அத்தகைய விழாக்களில் திருக்கல்யாணத் திருவிழா தனித்துவம் கொண்டது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான ஆலயங்களில் 10 நாட்கள் பெரிய திருவிழாக்கள் நடத்தும்போது திருக்கல்யாண விழா 6 ஆம் திருநாள் அல்லது 7 ஆம் திருநாளாக நடத்தப்படும்.

சில ஆலயங்களில் தனியாகவும் திருக்கல்யாண விழா நடைபெறுவது உண்டு.

ஆலய வழிபாடுகளில் ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு விழாவால் சிறப்பு ஏற்படும். அந்த வகையில் பங்குனி மாதம் உத்திரம் நட்சத்திரம் திருநாள் மிகுந்த மகத்துவம் கொண்டது.

இந்த நாளில் மிக அதிகமான தெய்வத் திருமணங்கள் நடந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அன்று எந்தெந்தத் தெய்வங்களுக்குத் திருமணம் நடத்தது தெரியுமா?

சிவபெருமான் - பார்வதி திருமணம்
ஸ்ரீரங்கமன்னார் - ஆண்டாள் திருமணம்
தேவேந்திரன் - இந்திராணி திருமணம்
பிரம்மா - சரஸ்வதி திருமணம்
ஸ்ரீராமர் - சீதை திருமணம்
விநாயகர் - சித்தி, புத்தி திருமணம்
முருகன் - வள்ளி திருமணம்
நந்தி - சுயம்பிரகாசை திருமணம்.

இப்படி இறை திருமணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

அதைப் பிரதிபலிக்கும் வகையில் ஆலயங்களில் தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் திருக்கல்யாணம் நடத்தப்படுகிறது.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொண்டால் அதற்கு "கல்யாணம்" என்று பெயர். ஆனால் ஆலயத்தில் இறைவனும் இறைவியும் திருமணம் செய்து கொண்டால் அதற்கு "திருக்கல்யாணம்" என்று பெயர்.

இறைவன் எடுக்கும் வடிவமானது போகி, யோகி, வேகி என்று மூன்று வகைப்படும். இதில் போகம் என்பது இன விருத்தியைக்குறிக்கும். உலகில் உள்ள 84 இலட்சம் ஜீவன்களுக்கும் இறைவன் இந்தச் சக்தியைக் கொடுத்துள்ளான்.

சிவம் இல்லையேல் சக்தி இல்லை, சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்பதன் அடிப்படையில் சிவசக்தி சங்கமத்தால் இந்த உலகில் அனைத்தும் இயங்குகின்றன.

இறைவன் போக வடிவத்தில் அந்தத் தத்துவத்தில் இல்லாமல் போனால் உலகத்து உயிர்கள் எதுவும் போக வாழ்க்கை வாழ இயலாது.

இதைக் கருத்தில் கொண்டே ஆலயங்களில் இறைவனுக்குத் திருக்கல்யாணம் செய்து வைக்கும் வைபவத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள்.

அதோடு அந்தத் திருக்கல்யாணத்தை எப்படி நடத்த வேண்டும் என்ற ஆகம விதிகளையும் வகுத்து தந்துள்ளன. நமது பெற்றோர் திருமணத்தை நாம் காண முடிவதில்லை. என்றாலும் சஷ்டியப்பூர்த்தி விழா மூலம் பெற்றோர் திருமணத்தை மகன்களும் மகள்களும் கண்குளிர கண்டுகளிக்க முடிகிறது. அது போல இறைவனது திருக்கல்யாணத்தை ஆண்டுக்கு ஒரு தடவை நடத்தி அவனது அருளைப் பக்தர்கள் பெற்று மகிழ்கிறார்கள்.

ஒரு இடத்தில் புதிதாகக் கோவில் கட்டி கும்பாபிஷேகம் நடத்தினால் இறைவன் இறைவியின் திருக்கல்யாணத்தையும் நடத்துவார்கள். நம் முன்னோர்கள் இதை ஒரு மரபாகவே வைத்திருந்தனர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்ட முத்தரப்பு செயலகம் ஸ்தாபிப்பு



(கொழும்பு)

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கிடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்ட முத்தரப்பு செயலகம் கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தியா மற்றும் மாலைதீவுகளுடன் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான முந்தைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான முத்தரப்பு கூட்டங்களில் நடைபெற்ற கலந்துரையாடல்களுக்கு இணங்க கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான முத்தரப்பு தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுக்கான செயலகம் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள இலங்கை கடற்படை தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. (நி-4)

## துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கான காலம் நீடிப்பு

(கொழும்பு)

துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கென வழங்கப்பட்ட கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்திற்கான பாதுகாப்பு அமைச்சு மற்றும் மாவட்ட செயலகங்களினூடாக முன்னெடுக்கப்படும் சகல துப்பாக்கிகளுக்கான புதுப்பிக்கும் நடவடிக்கைகளும் கடந்த 28 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

எனினும் மே மாதம் 31 ஆம் திகதி வரை துப்பாக்கிகளுக்காக அனுமதிப்பத்திரங்களை பயன்படுத்த முடியுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் புதிய பதிவு நடவடிக்கைகளை எவ்வித கட்டணமும் இன்றி முன்னெடுக்க முடியுமெனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 280 | 200 | 250 |
| தக்காளி | 240 | 240 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 150 | 100 | 120 | 160 |
| கரட் | 160 | 220 | 240 | 240 |
| பூசணி | 80 | 100 | 70 | 80 |
| புடோல் | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 200 | 160 | 140 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 220 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 160 | 150 | 150 |
| லீக்ஸ் | 100 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 250 | 250 | 200 | 240 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 120 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-80 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 120 | 160 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | 100 | 50 | 100 |

# வட மாகாணத்தில் இதுவரை 1089 தொற்றாளர்கள் அடையாளம்

(நல்லூர்)

**வடமாகாணத்தில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 563 பேரும், பெப்ரவரி மாதத்தில் 278 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 128 பேரும், மன்னார் மாவட்டத்தில் 85 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 44 பேரும், வவுனியா மாவட்டத்தில் 14 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் 61 கைதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் பெப்ரவரி மாதத்தில் 16 ஆயிரத்து 427 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 11 ஆயிரத்து 126 பரிசோதனைகளும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 5 ஆயிரத்து 301 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்று ஆரம்பித்த கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இன்றுவரை (நேற்று) வடமாகாணத்தில் ஆயிரத்து 89 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 349 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், 376 பேர் வவுனியா மாவட்டத்திலும், 267 பேர் மன்னார் மாவட்டத்திலும், 78 பேர் கிளிநொச்சி மாவட்டத்திலும், 19 பேர் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரை வடமாகாணத்தில் கொரோனாத் தொற்றால் 5 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் 3 இறப்புக்களும், வவுனியா மற்றும் யாழ்.மாவட்டத்தில் தலா ஒவ்வொரு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.



வடமாகாணத்தில் 8 ஆயிரத்து 636 சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதுடன் தனியார் துறை மருத்துவப்பணியாளர்கள், மருத்துவபீட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார். (5-4-33)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சமூகநல அமைப்பான Che Foundation இன் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று புதன் கிழமை காலை 09 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்ப்பாணம் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் அமைந்துள்ள LIC Lanka Ltd கட்டட மண்டபத்தில் இடம் பெறும்.

இரத்ததான முகாமில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசனம் அடையாளமிடப்பட்டது

(முறிகண்டி)

மாந்தை கிழக்கு மாற்றுத் திறனாளிகள் அமைப்பினால் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகளிற்கான ஆசனம் அடையாளமிடும் வேலைத்திட்டம் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பேருந்து நிலையம், முறிகண்டி மற்றும் பரந்தன் பேருந்து தரிப்பிட நிலையம் ஆகிய பகுதிகளில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வேள்ட்விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் குறித்த வேலைத்திட்டமானது பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் மொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லை. இவ்வாறான நிலையில் ஆசன ஒதுக்கீட்டு பகுதியில் அடையாளப்படுத்தும் வகையிலான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (5-4-100)



நிதி அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலமாக இழப்பீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு இழப்பீட்டுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார். இதில் 30.25 மில்லியன் தொகையில் 392 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் தெரிவிக்கிறது. (படம்- நிபோஜன், சப்தசங்கரி)

# வைத்தியரை நியமிக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் இரவுப் பணியில் வைத்தியர் இல்லாமை காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் இருந்து பணிக்கு வரும் வைத்தியர் பகல் நேரத்திற்கு மட்டும் சேவையாற்ற வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளையில் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்குச் சென்றால் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் இருந்து வைத்தியர் வரும்வரை காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மூன்று வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டுமே பகல் நேரத்தில் குறிப்பிட்ட நேரமே பணியில் உள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையை நம்பியுள்ள 3,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன.

விபத்துகள், மகப்பேறு, விலங்குகளின் தாக்குதல்கள் என்பவற்றின் போது ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாததன் காரணமாக இருபது கிலோமீற்றர் தூரத்தில் இருந்து வருகைதரும் வைத்தியருக்காக காத்திருக்க வேண்டிய நிலைமை உள்ளது.

எனவே இரவிலும் தங்கி நின்று பணியாற்றக் கூடிய வைத்தியர் ஒருவரை ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கு நியமிக்குமாறு ஒட்டுசுட்டான் மக்களும் பொது அமைப்பினரும் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-350)

# மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சி

(குப்பிழான்)

வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகத்தின் அனுசரணையில் நடத்தும் மகளிர் அபிவிருத்தி நிலையக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9.15 மணி முதல் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (5-4-18)



சாவகச்சேரி-மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் வல்லிபுரம் நாகலிங்கத்தின் நினைவுகூரல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சயந்தன், நகரசபை உறுப்பினர் தர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-சுபேசன்)



யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சி நெறி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

ஏய்த்துப் பிழைத்தவர்கள், அடக்கி அழித்தவர்கள், ஆணவக்காரர்கள் அனைவரும் அஞ்சுகின்றனர். மக்கள் சிந்தும் கண்ணீரினால். – அண்ணாதுரை

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## ஈழத் தமிழர்களின் அவலத்தை உலக நாடுகள் உணர வேண்டும்

உலகம் எங்கும் ஈழத் தமிழர்களின் அகிம்சைப் போராட்டம் நடந்த வண்ணமுள்ளது.

அதிலும் குறிப்பாக ஜெனிவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு முன் பாக புலம்பெயர் ஈழத்தமிழ் மக்கள் நடத்து கின்ற அகிம்சைப் போராட்டம் உலக நாடு களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கையில் தமிழ் இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமையை – அநீதியை – அக்கிரமத்தை கண்டிருந்தும் உலக நாடுகள் இன்னும் அமைதியாய் இருப்பது ஏன்?

ஈழத் தமிழ் மக்கள் மீது இலங்கை ஆட்சியாளர்கள் கொடும் போர் நடத்தியபோது, உலக நாடுகள் மௌனம் காத்ததில்; இந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு துடிக்கத் துடிக்கக் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்கள் ஏராளம்.

இப் பெரும் அவலம் நடந்து 12 ஆண்டு கள் கடந்த போதிலும் இன்னும் தமிழ் மக் களுக்கு நீதி கிடைக்கவில்லை.

குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படவில்லை.

கடந்த காலங்களில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் இன்னமும் கிடப்பில் உள்ளன.

கால அவகாசம் கேட்டு காலத்தைக் கடத்தி உலக நாடுகளை ஏமாற்றிவிட்டு, இப்போது நிபந்தனைகளுக்கு உடன்பட முடியாது என்று தட்டிக்கழிக்க முடியுமென்றால், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் அடிமை வாழ்வோடு காலம் கழிப்பதுதான் விதியா? என நம் தமிழ் உறவுகள் எழுப்புகின்ற கோசம் உலக நாடுகளில் அதிர்கிறது.

ஓ! உலகமே! ஜெனிவாவில் நம் தமிழ் மக்கள் ஒன்றுகூடி எழுப்புகின்ற கோசம்; ஈழத்தில் வஞ்சிக்கப்பட்ட தமிழ் இனத்துக்கு நீதி வேண்டும் என்பதற்காகவே.

ஆம், இலங்கையில் தமிழ் மக்கள் நடத்திய அகிம்சைப் போராட்டங்கள், பேரணிகள் என அனைத்தும் வீணாகிப் போயின.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற இறுமாப்பில் இருக்கக்கூடிய சிங்களப் பேரினவாதம் தமிழ் இனத்தின் அவலத்தை கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை.

ஆகவேதான் இலங்கை விடயத்தில் உலக நாடுகள் தலையிட வேண்டும் எனக் கோருகின்றோம்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் எடுக்கின்ற தீர்மானம் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வை – உரிமையை உறுதி செய்வதாக இருக்க வேண்டும் என்பதே ஜெனிவாவில் புலம்பெயர் தமிழ் உறவுகள் எழுப்புகின்ற நீதிக்கான கோசம்.

ஆக, உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து ஜெனிவாவில் அணிதிரண்டு நீதியைப் பெற்றுத் தாருங்கள். எங்கள் தமிழ் இனம் வாழ்வதற்கு வழி செய்யுங்கள் என்று அகிம்சை வழியில் கேட்கின்ற மக்களின் குரல், உலக நாடுகளின் செவிகளில் ஓங்கி ஒலிக்கட்டும்.

அதுவே எமக்கு நீதியைப் பெற்றுத் தரட்டும்.

## யாழ்.மணியந் தோட்டத்தில் 8 மாத குழந்தையை துன்புறுத்திய குற்றச்சாட்டில் தாய் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் மணியந்தோட்ட பகுதியிர் 8 மாதங்கள் நிரம்பிய குழந்தையை அடித்து துன்புறுத்திய குற்றச்சாட்டில் தாயாரை சட்ட மருத்துவ வல்லுநர் முன்னிலையில் முற்படுத்தி மனநிலை மற்றும் பிற மருத்துவ பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உத்தர விட்டுள்ளார்.

அத்துடன், குழநதையின் உடல் நிலை தொடர்பில் சட்ட மருத்துவ வல்லுநரின் அறிக்கையைப் பெறுவதற்கு வசதியாக இருவரையும் யாழ்ப் பாணம் போதன வைத்திய சாலையில் சேர்க்குமாறும் யாழ்ப் பாணம் மேலதிக நீத வான் நீதிமன்றம் உத்தர விட்டது.

யாழ்ப்பாணத்தில் 8 மாதங்கள் நிரம்பிய குழந்தையை தாயார் அடித்துத் துன்புறுத்திய காணொளிப் பதிவு சமூக வலைத்தளங்களில் பரவியது.

அதனையடுத்து நல்லூர் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணம் பொலி ஸாரும் இணைந்து துன்புறுத்தலுக்கு உள்ளான குழந்தையை நேற்று காலை மீட்டனர்.

அத்துடன் குழந்தையை துன்புறுத்திய தாயாரைக் கைது செய்த பொலிஸார், வாக்குமூலத்தைப் பெற்ற பின்னர் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் (சிறுவர் நீதிமன்றம்) முற்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் ஆராய்ந்த மேலதிக நீதவான், தாயாரையும் குழந்தையும் சட்ட மருத்துவ வல்லுநர் முன்னி லையில் முற்படுத்த வசதியாக யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்க உத்தரவிட்டார்.

அத்துடன், தாயாரின் மனநிலை தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி ஊடாக உளநல மருத்துவ வல்லுநரிடம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் நீதின்றம் உத்தர விட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த 24 வயதான பெண் கணவர் அரபு நாடு ஒன்றில் தொழில் வாய்ப்புப் பெற்றுச்சென்ற நிலையில் யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தில் வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-3-33)

## ஒட்டுசுட்டான் பொலிஸார் அனந்தியிடம் வாக்குமூலம்

(முல்லைத்தீவு)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் கலந்து கொண்ட தையிட்டு ஒட்டுசுட்டான் பொலிஸாரினால்நேற்றைய தினம் முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரனிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் புதுக் குடியிருப்பு பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுச் சென்ற நிலையில் நேற்றைய தினம் ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் வாக்கு மூலம் பெறப பட்டமை குறிப்பிடத் தக்கது. (ம-3-104)

## இந்தியப் பிரஜாவுரிமை கோரும் இலங்கை அகதிகள்

(சென்னை)

இந்திய பிரஜாவுரிமை வழங்குமாறு இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரம் மண்டபம் அகதி முகாமிலுள்ளவர்களே கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்திய மத்திய உள்துறை அமைச்சின் தரவுகளுக்கமைய, சுமார் ஒரு இலட்சம் இலங்கை அகதிகள் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

58ஆயிரத்து843 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தின் முகாம்களில் தங்கியுள்ளதுடன், முகாம்களில் இல்லாத அகதிகளாக 34 ஆயிரத்து1 35 பேர் தங்கியுள்ளதாக அந்தத் தரவுகள் குறிப்பிடுகின்றன.

இலங்கையில் இருந்து அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என ஈழ அகதிகள் பாதுகாப்புக் குழு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பா.புகழேந்தி அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி-4)


## குணமடைந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 598 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின எண்ணிக்கை 80 ஆயிரத்து 20 ஆக அதிகரித்துள்ளது. (நி-4)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

ம-வின் முதல் சந்திப்பு அது. அறையின் உள்ளே சென்ற அவர் பேச்சிழந்தவராய், வியப்புடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றார். புண்ணியத் தலங்கள் அனைத்தும் அந்த அறையில் கூடியிருப்பதுபோல் அவருக்குத் தோன்றியது. சுக தேவரே அங்கு அமர்ந்துகொண்டு எம்பெருமானின் மகிமைகளைக் கூறுவது போன்றதோர் உணர்வு அவர் உள்ளத்தில் எழுந்தது. ஸ்ரீசைதன்ய தேவர் புரிக்ஷேத்திரத்தில், ராமானந்தர், சுவரூப் முதலான பக்தர்களோடு சேர்ந்து இறைவனின் திருநாமத்தையும் மகிமைகளையும் மெய்மறந்து பாடி ஆடிக்கொண்டிருப்பது போலவும் அந்தக் காட்சி அவருக்குத் தோன்றியது.

ஸ்ரீராமகிருஷ்ணர் பேசிக்கொண்டிருந்தார்: 'ஹரி நாமத்தையோ ராம நாமத்தையோ ஒருமுறை சொன்ன அளவிலேயே ஒருவனுக்கு மயிர்க்கூச்செறியுமானால், ஆனந்தக் கண்ணீர் வழியுமானால், அவன் அதன்பிறகு சந்தியாவந்தனம் முதலியவற்றைச் செய்யத் தேவையில்லை. அவன் கர்மத் தியாகம் செய்யும் தகுதி பெறுகிறான். இதை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். செயல்கள் தானாகவே அவனிடமிருந்து கழன்றுவிடுகின்றன. இந்த நிலையில் அவன் ராம நாமத்தையோ ஹரி நாமத்தையோ அல்லது ஓங்காரத்தையோ ஜபம் செய்தாலே போதுமானது.'

(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# நறுவிலி அல்லது மூக்குசளி பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Cordia dichotoma**
**Family - Boraginaceae**
**Engl - Sebesten Plum**
**Sinh - Lolu**



இம்மரம் மிகுதி செழிப்பால் வளர்ந்து நிழல் கொடுக்கக் கூடியது. குலைகுலையாக பழுத்துத் தொங்கும். பழங்களின் சுளையானது குழ குழப்பாய் இருப்பதால் மூக்கு சளி பழம் எனவும் அழைக்கப்படுகிறது. இது ஓர் பூக்கும் நடுத்தர மரவகையைச் சார்ந்தது. அடிமரம் உயரம் அற்றதாக வளைந்து திருகுடையதாக கரணைகள் கொண்டிருக்கும். இதன் பட்டை சாம்பல் நிறமாகவும் பல வெடிப்புகள் உள்ளதாகவும் இருக்கும். ஒழுங்கான இருபாலான வெள்ளை நிறப்பூக்களைக் கொண்டது.

தனியிலை ஒன்றுவிட்ட இலையமைப்புக் கொண்டது. கோளவடிவான இலைகள், உருண்டைய பழங்கள், மணல் நிறத்தில் பழங்கள் காணப்படும். ஆனி, ஆடி மற்றும் மார்கழி மாதங்களில் பூக்கள் மலர்ந்திருக்கும்.

இதன் பழங்கள் சாப்பிடக் கூடிய **(Edible)** இனிப்பு சுவையான சளித்தன்மையுள்ள **(Mucilaginous)** பழமாகும். சாப்பிடும் போது இனிப்பாகவும் சாப்பிட்ட பின்பு துவர்ப்புச் சுவையையும் உணரக் கூடிய மருத்துவ முக்கியத்துவமுடைய பழமாகும். இதனை உடன் பழமாகவும் உலர்ந்த கனிகளாகவும் ஊறுகாய் தயாரித்துப் பயன்படுத்தலாம்.

இதன் பழங்களைவிட இலைகள், பட்டைகள், பூக்கள் போன்ற அனைத்தும் மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. பொதுவாக வெப்ப வலய நாடுகளில் இதன் பரம்பல் அதிகமாகும்.

இதன் பழங்களில் பீற்றர் சைற்றோஸ்ரிரோல் பாமிற்றிக் கமிலம், ஸ்ரெயரிக்கமிலம், ஒலிக் கமிலம் போன்ற லேவியற் பொருட்கள் காணப்படும்.

**100 கிராம் பழத்தி லுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு 6 கிராம்
புரதம் 35 கிராம்
கல்சியம் 55 மி.கிராம்
பொஸ்பரஸ் 275 மி.கிராம்
நாகம் 2.மி.கிராம்
இரும்புச்சத்து 6 மி.கிராம்
மகனீசியம் 2 மி.கிராம்
குரோமியம் 0.2 மி.கிராம்
செம்பு 1.6 மி.கிராம்
ஒட்சாலிக்கமிலம் 250 மி.கிராம்
உயிர்ச்சத்து "C" 25 மி.கிராம்

இதன் பட்டையில் **tannin, Gallic acid** போன்ற முக்கிய வேதியச் சத்துக்களும் காணப்படும்.

இதன் விதைகளில் முக்கிய வேதியற் சத்தான லினோலிக்கமிலமும் காணப்படுகிறது.

நன்றாக வளர்ந்த மரங்களில் ஒரேநேரத்தில் ஒரு இலட்சம் பழங்களை காணலாம். பழங்கள் 20 இற்கு மேல் சாப்பிடமுடியாது. பழங்கள் கிடைக்கும் காலங்களில் பழங்களைத் தொடர்ச்சியாக சாப்பிட்டு வருவதால் விந்து நீத்துப்போதல் நீங்கி ஆண்மலட்டையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

நமது உடற்சூட்டைத் தணிக்கக் கூடியது. உடல் குளிர்ச்சி அடையும். இதன் பழங்களைச் சாப்பிட்டு வருவதால் வயிற்றிலுள்ள குடற்புழுக்களை மலத்துடனே வெளியேற்றும் தன்மையுடையது. அதே போல் மலத்தை இளக்கி வெளியேற்றும் தன்மையுடையது.

மூக்கு சளி பழங்களை அடிக்கடி சாப்பிட்டு வருவதால் எடை குறைந்தவர்கள் அவர்களின் உயரத்திற்கு ஏற்ப உடல் உடையை இயற்கை முறைப்படி கூட்டச்செய்யலாம்.

இதில் காணப்படும் முக்கிய உயிர்ச்சத்துக்கள், கனிமங்களும் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக்கூடியதாக இருக்கும்.

நாட்பட்ட மலச்சிக்கல், மூல வியாதிகளை குணப்படுத்த இதன் பழங்களை அடிக்கடி சாப்பிட்டுவர வேண்டும். அல்லது ஊறுகாய் போட்டும் பயன்படுத்தலாம்.

மூக்குசளி பழங்களை சாப்பிடுவதால் குடிவகைகளைப் பயன்படுத்தபவர்களுக்கு ஏற்படும் ஈரல் பாதிப்பைத் தடுக்கலாம். கல்லீரலில் தேங்கும் போதைப்பொருட்களின் நச்சுத்தன்மையையும் நீக்கக் கூடியது.

தோல் வறட்சி ஏற்படுபவர்கள் அடிக்கடி மூக்குசளி பழங்களை சாப்பிடுவதால் தோல் வறட்சி நீங்கி தோல் மினுமினுப்பாகவும் இருக்கும்.

இதன் பழங்களை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு இதில் நார்ச்சத்துக்கள் அதிகமாக இருப்பதால் குடல் இயக்கத்தை சீராக்கக்கூடியதாகவும் அமைந்து விடுகிறது.

இதன் பழங்களைத் தொடர்ச்சியாக சாப்பிட்டுவரும் போது மூட்டுக்களுக்கு பலத்தைக் கொடுக்கும். மூட்டுகளுக்கிடையே உராய்வு ஏற்படாமல் தடுக்கக்கூடியது.

நறுவிலிப்பழங்கள் அதிகரித்த பித்தத்தையும் அழலையும் தணிக்கக்கூடியது. அதியுயர் குருதி அமுக்கம் உடையவர்களும் இப்பழங்களைச் சாப்பிடலாம்.

சமவெளித் தரைகளில் ஒன்றாக வளரக்கூடியது.

இப்பழங்கள் நிறையக் கிடைக்கும்போது சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும். இரவில் 2 கிராம் அளவு பாலில் உட்கொண்டுவர உடல் குளிர்ச்சியடையும், சிறுநீர் எளிதில் பிரியும், மார்புச்சளி அகலும், ஈரலைப் பலப்படுத்தக் கூடியது.

நறுவிலி இலைகளைக் கழுவி அரைத்து முகப்பருக்கள் மீது தடவிவர முகப்பருக்களும் மறையும். அதனால் ஏற்படும் வடுக்களும் அகலும்.

தேக உழைப்பால் களைப்பு ஏற்படும் போது இதன் இலைகளை உப்புத்தண்ணீரில் கழுவி பின்பு நல்ல நீரில் கழுவி சிறிதாக அரிந்து ஒரு பங்கு எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காகக் குடிநீர் காய்ச்சி 50 மில்லி காலை, மாலை எடுத்துவர களைப்பு, மூச்சிரைப்பு நீங்கும்.


இதன் விதைகளைச் சேகரித்து பொடித்து தேங்காய் எண்ணெயில் குழப்பி நாட்பட்ட சரும நோய்களுக்கு பூசி வர தோலில் ஏற்படும் நமைச்சல், அரிப்பு என்பன நீங்கும்.


இதன் இலைக்கொழுந்துகளை ஆய்ந்து கழுவி மைபோல அரைத்து தினமும் மாலையில் 5 கிராம் அளவு வெண்ணெயில் உட்கொண்டு வர மூல நோய் தணியும்.

நறுவிலி மரப்பட்டைகளையும் விதைகளையும் சேகரித்து உலர்த்தி பொடித்து 1 – 2 கிராம் அளவு காலை, மாலை பனை வெல்லத்தில் உட்கொண்டுவர குடற்புண் நீங்கும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். அதிகரித்த பித்தத்தையும் குறைக்கும்.

அகஸ்தியரின் செய்யுளின் படி,

**"நறுவலியிவைக்கிரைப்பு**
**நாசமல் வேர்க்கு**
**மறுவில் எலும்புருக்கி**
**மாறும் - நறுவலியின்**
**தன்பழமி ரத்தபித்தஞ்**
**சார்மேக முந்தீர்க்கும்**
**இன்புறயா வர்க்குமி சை"**





இதனிலையால் இரைப்பு (ஆஸ்மா) நீங்கும். வேருக்கு எலும்புருக்கி போம். பழத்திற்கு குருதியழல் நோயும் வெள்ளை சாய்தல் நோயும் நீங்கும் என்க.

இதன் விதைகளை அரவல் நொருவலாக இடித்து குடிநீர் காய்ச்சி வாய்கொப்பளித்துவர பல் சம்பந்தமான நோய்களான பல்லசைவு, பல்லரணை, ஈறு கட்டு, முரசுகரைதல் போன்றன நீங்கும்.

குருதிக்சோகை நோய் உள்ளவர்கள் அதாவது இரத்தத்தில் ஈமோகுளோபினின் அளவு குறைவாக இருப்பவர்கள் இந் தப் பழங்களை தாராளமாகச் சாப்பிடலாம்.

நறுவிலிப் பழங்களைத் தொடர்ந்து சாப்பிட்டு வரும் போது இரத்தத்திலுள்ள கழிவுகளை நீக்குவதோடு சிறுநீரகத்தின் செயற்பாட்டையும் சீராக்கக் கூடியதுமாகும்.

இதன் உலர்ந்த பழங்களைப் பொடித்து 2 கிராம் அளவு தேனுடன் கலந்து காலை, மாலை சாப்பிட்டுவர நுரையீரல்சம்பந்தமானநோய்களை நீக்கக்கூடியது.

உலர்ந்த பழங்கள், இதன் பட்டை, விதைகள் மூன்றையும் ஒரேயளவாக எடுத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு தினமும் வெந்நீரில் தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டுவர பித்தப்பைக் கற்களை உடைத்து கரைக்கக் கூடியதாகவும் இருக்கும்.

இவ்நறுவிலி மரக்கட்டைகளிலிருந்து தான் ஈர்கோலி, பேன்சீப்பு போன்றனவும் தயாரிக்கப்படுகின்றது.

இப்பழங்களைத் தொடர்ந்து சாப்பிட்டுவர புற்றுநோய்க்கலங்களை வளரவிடாமல் தடுக்கவும் செய்யும். பழங்களைச் சேகரித்து தோலை உரித்து சாப்பிட வேண்டும்.

இம்மரத்தின் பரம்பல் யாழ். மாவட்டத்தில் அதிகம். பழங்களும் நிறைய கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. சுவையாகவும் இருக்கும். முக்கியமாக நிறைய மருத்துவப்பண்புகள் நிறைந்தது. ஆனாலும் எம்மவர்கள் மேலைத்தேய பழங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை சுதேச பழங்களுக்குக் கொடுப்பதில்லை.

## வவுனியாவில்...

மகாலிங்கம் (வயது - 56) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3,299)

## யாழ்.பல்கலை...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-3,18,33)

## கொடிகாமம்...

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே குறித்த நபருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## வடக்கில்...

நேற்று 292 பேருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 411 பேருக்கும் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## கொரோனா...

ழுந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 483 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மாகாண சபைத்...

கின்றன.

எனவே, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்க மாட்டோம்."

இவ்வாறு தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மாகாண சபை முறைமையால் நாட்டுக்குப் பாதிப்புகளே ஏற்பட்டுள்ளன. அந்த முறைமை இலங்கைக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதொன்றாகும்.

எனவேதான் 13ஐ நீக்குமாறும், புதிய அரசமைப்பு ஊடாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசு நடத்தக் கூடாது என்றார். (ம-3)

## இலங்கை அரசின்...

நேற்று வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் புறக்கணித்து விட்டதாக இலங்கை தனது கடும் ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் பதில்களையும் இணைத்து ஆணையாளரின் அறிக்கையுடன் வெளியிடுமாறு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நஷாத் ஷமீமுக்கு எழுதிய கடிதத்தில் கோரியிருந்தார்.

இருப்பினும் குறித்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு திருத்தப்படாத அறிக்கை பேரவையின் 46ஆவது அமர்வு பட்டியலில் சேர்க்கப்பட்டதாக ஆட்சேபனை வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

## இரணைதீவில்...

திரும்பி வருகின்ற நிலையில் அரசாங்கத்தின் இம்முடிவை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ம-3,285)

## யாழின் முத்தீவு...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில், யாழில் மூன்று தீவுகளில் சீனா முன்னெடுக்கவிருந்த மின்உற்பத்தி வேலைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை குறித்து வினவியபோதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்ட எந்தவொரு தீர்மானமும் அரசியல் மற்றும் சர்வதேச இராஜதந்திர நெருக்கடிகளால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிறுத்தப்படவில்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றோம் என்றார். (ம-3)

## மக்கள் எதிர்ப்பை...

றோடு இறந்தவர்களின் சடலங்களை புதைப்பதற்கான குழிகள் தோண்டப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது

இதேபோன்று கடந்த சில நாட்களுக்கு முன்னர் கக்கட தீவு பகுதியிலும் குழிகள் தோண்டப்பட்ட நிலையில் நீர் நிறைந்த காரணத்தினால் அப்பகுதி குழிகளுடன் கைவிடப்பட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,285)

## சடலத்தை அடக்...

றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் காரணமாக

# மூத்த பத்திரிகையாளர் ஷண் காலமானார்



(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட பத்திரிகையாளர் எஸ். சண்முகராஜா தனது 85ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

55 வருடங்கள் தொடர்ச்சியாக ஊடகத் துறையில் கால் பதித்த சண்முகராஜா சில வாரங்கள் சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

ஷண் என்று எல்லோராலும் அழைக்கப்படும் மூத்த பத்திரிகையாளர் சண்முகராஜா கலை, இலக்கியம், சினிமாத் துறை, தமிழக அரசியல், என பல்வேறு பரிணாமங்களில் தனது ஊடகப் பணியினை ஆற்றி வந்திருந்தார்.

இவரின் ஊடகப் பணிக்காக பல விருது இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

உயிரிழப்பவர்களின் சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், சிறுபான்மையின மக்கள் மத்தியில் குழப்பமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் தொடர்புகொண்ட கடற்றொழில் அமைச்சர் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். (ம-3,33)

## தமிழ்...

உயிரிழக்கும் முஸ்லிம் சகோதரர்களின் ஜனாஸாக்களை கிளிநொச்சி மாவட்டம் இரணைதீவில் அடக்கம் செய்ய அரசு எடுத்துள்ள தீர்மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தமிழ் - முஸ்லிம் உறவைப் பிரிக்க அரசால் அரங்கேற்றப்படவுள்ள சதித் திட்டம் என்றும் கூட்டமைப்பின் சார்பில் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன், த.சித்தார்த்தன் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-3)


சிறுநீரகம் தேவை

O, B குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு:- (5995)

076 239 9874



மணிவிழா வாழ்த்து



மூளாய், வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகரதும் ஸ்ரீ முத்துக்குமாரரதும் பரிபூரண ஆசியுடன் எங்கள் அன்புச் சகோதரன்

திரு.த.பத்மநாதன்

இசை ஆசிரியர்

(யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்)

அவர்கள் நீடூழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

திருமதி பங்கயச்செல்வி முகுந்தன் குடும்பம் மூளாய்.

திருமதி திலவதியார் பொன் குணரத்தினம் குடும்பம் - சுழிபுரம்.

(C-1579)



தன நிதானய

திகதி - 2021.03.02

சீட்டிழுப்பு இலக்கம் - 451

D 16 20 40 54

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

NATIONAL LOTTERIES BOARD

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 02.03.2021

சீட்டிழுப்பு இலக்கம் 2709

ஆங்கில எழுத்து Q

வெற்றி இலக்கங்கள் 29 31 53 65

தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2021/03/02

1579 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 15

வெற்றி இலக்கங்கள் 07 28 32 33

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத

திகதி 2021/03/02

சீட்டிழுப்பு இலக்கம் 4414

ஆங்கில எழுத்து 0

வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 5 0 9 1 4

தேசிய லொத்தர் சபை

மெகா பவர்

திகதி 02/03/2021

சீட்டிழுப்பு இலக்கம் 0779

வெற்றி எழுத்து M

சுப்பர் இலக்க 16

வெற்றி இலக்கங்கள் 19 21 27 60

அத கோடிபதி ADA KOTIPATHI

கிழமை: செவ்வாய்க்கிழமை

சீட்டிழுப்பு இல: 1210

வர்ணம் : இள நீலம்

சீட்டிழுப்பு திகதி: 02.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 113,374,010

வெற்றி இலக்கங்கள் 12 39 71 72

ஆங்கில எழுத்து J

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 0112 333 546-47

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida

கிழமை: செவ்வாய்க்கிழமை

சீட்டிழுப்பு இல: 3540

வர்ணம் : இள நீலம்

சீட்டிழுப்பு திகதி: 02.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,267,143

வெற்றி இலக்கங்கள் 32 37 40 66

ஆங்கில எழுத்து W

ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம்

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி

சுப்பர் ஜக்பொட் 24,61,251/=

திகதி : 02.03.2021

வெற்றி வாரம் : 3091

வர்ணம் : சிவப்பு

வெற்றி இலக்கங்கள் 05 25 47 54

மீனம்

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,543,300

SUPER BALL சுப்பர் போல

சீட்டிழுப்பு வாரம் 1384

நிறம் இள நீலம்

சீட்டிழுப்பு திகதி 02/03/2021

தினம் செவ்வாய்க்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும் J 01 56 61 66

அடுத்த சுப்பர் ஜக்பொட் 71,853,716/=

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 0112 333 546-47

சீட்டிழுப்பு வாரம் 697

வர்ணம் இளஞ் சிவப்பு

திகதி: 02.03.2021

செவ்வாய்

J 14 35 53 58

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,499,055

தொ.பே: 0112 333 546/47

Web: www.dlb.lk

## உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை

DHL

உள்நாடு யாழ். - கொழு. / கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்

வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும் ( நிபந்தனைக்குட்பட்டது .)



**Lanka Cargo Worldwide Express**

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

076 283 2397
076 485 4092

(5980)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- மனிதவள முகாமையாளர் HR Manager
- வரவேற்பறை முகாமையாளர் Front Office Executive
- உணவக முகாமையாளர் Restaurant & Bar Manager
- உணவகப் பணியாளர் Restaurant Waiter
- சமையலறை உதவியாளர் Kitchen Helper
- யாழ்ப்பாண வகை சமையலாளர் Jaffna Style Cook - Commis 11
- சலவையக உதவியாளர் Laundry Helper
- பராமரிப்பு தொழில்நுட்ப உதவியாளர் Maintenance Technician
- பாதுகாப்பு உத்தியோகத்தர் Security

(5994)

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுய விபரக் கோவையை 09.03.2021 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு / மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

rm@tilkohotels.com 021 720 0707
Tilko Jaffna City Hotel 076 149 8963
No. 70/6, K.K.S Road, Jaffna. 077 470 5759

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடவை விற்பனை நிலையத்திக்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.
மேலும் பில் கிளாக் (சிட்டை எழுதுனர் - பெண் )கணனி அனுபவம் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
( வயது - 18 - 25 வரை )

(5999)

☎-077 748 8093

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(5993)

## வேலையாட்கள் தேவை

வடமராட்சிப் பகுதியில் அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணிபுரிவதற்கும், துப்பரவுப் பணிகளில் ஈடுபடுவதற்கும் வேலையாட்கள் தேவை.

(C-1580)

077 076 1700, 070 455 5123
021 222 4585

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய். நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலவ்பரப்பு)
( 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன் )
பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்.
( தரகர் தேவையில்லை.)

(5976)

தொடர்பு
077 596 3845, 076 640 0974

## GERMANY, SWISS செல்வோருக்கான A1, A2 Deutsche வகுப்புக்கள்

ILTS London (UK)
English, Sinhala
சிறியோர், பெரியோர்களுக்கான விசேட வகுப்புக்கள்

**JV LANGUAGE CENTER**
Parameswara Junction,
No. 140, Palaly Road, Jaffna.

(C-1574)

076 401 8564

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் — லண்டன் 1000/= — 070 3305500, 077 888 9388

(C-1548)

| | | | |
|---|---|---|---|
| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1546)

0768226240 DHL



# கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பன்
**திரு.பொ.வாகீசன்**
( ஆசிரியர் - யா/கனகரத்தினம் ம.ம.வி. )
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி அழகம்மா பொன்னையா

( பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். )

அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். அவரின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5997)

தேவசகாயம் நடனகுமார் (அவுஸ்திரேலியா)
தேவசகாயம் நந்தகுமார் (லண்டன்)
மணியர்பதி
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.